கலாசிந்தாமணி

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

திருக்குறள்.

புத்தகம்	பிங்கள [illegible] மார்கழி௴	சஞ்சிகை
3	டிசம்பர்௴ 1917	3

கடவுள் வாழ்த்து

பரிதியானைப்பல்வேறுசமயங்கள்
காதியானைக்கண்டார்மனமேவிய
பிரிதியானைப்பிறரறியாததோர்
கருதியானைக்கண்டீர்தொழற்பாலதே.

—தேவாரம்.

வானாகிமண்ணாகிவளியாகியொளியாகி
யூனாகியுயிராகியுண்மையுமாயின்மையுமாய்க்
கோனாகியானெனதென்றவரவரைக்கூத்தாட்டு
வானாகிநின்றாயையென்சொல்லிவாழ்த்துவனே.

—திருவாசகம்.

திருவந்ததொல்லைப்புவனத்தொடுதேவர்போற்றிப்
பெருவந்தனைசெய்திருக்கும்பெற்றியெய்தி
பருவந்தனையுமுருவத்தையுமன்றிநின்ற
றொருவன்றனதுபதங்கன்னியுளத்துள்வைப்பாம்.

—கந்தபுராணம்.

வென்றான்வினையின்றொகையாகிவிரிந்துதன்க
ணொன்றாய்க்கிடந்தவுணர்வின்றொழியாதுமுற்றுஞ்
சென்றான்றிகழுஞ்சுடர்சூழொளிமூர்த்தியாகி
நின்றானடிக்கீழ்ப்பணிந்தார்வினைநீங்கினின்றார்.

—சூளாமணி.

பிங்களஹு மார்கழிமீ

கு.	கே.	1917ஹு டிசம்பர்-ஜனவரிமீ		
டிசம்பர்மீ 15௳	ச.	தக்ஷிணாயனம் ஏமந்தருது	பசலி 1326 1327	சாலி 1840
சுக். க்குராசி.	குச.			
ர.ரா. பு.		கொல்லம் 1092.	கலியுகம் 5019	ஹிஜரி 1335

யோகம்.	இங்கிலீஷ் மீ.	தமிழ் மீ.	வாரம்.	திதி, நக்ஷத்திரம், முதலியன.
சி	15	1	சனி	பிர 18-21, மூல 24-21, தி 20-23, ரா 20-4.
சி	16	2	ஞா	துவி 15-15, பூரா 22-44, ரா 14-19.
ம	17	3	திங்	திரி 11-16, உத்தி 20-17, ரா 2-8.
சி	18	4	செ	சௌ 6-29, திருவோ 17-2, தி 27-10.
பி	19	5	புத	பஞ் 1-12, ஷஷ்டி 54-21, அவி 13-21, ரா 2-33, ஸ்கந்த ஷஷ்டி.
ம	20	6	வி	ஸப் 49-35, சத 9-17, தி 23-58.
சி	21	7	வெ	அஷ் 43-18, பூரட் 5-5, தி 27-26.
பி	22	8	சனி	நவ 38-1, உத்திர 0-59, ரே 56-4, ரா 1-29.
சி	23	9	ஞா	தச 32-48, அசு 53-41, ரா 16-44. [ஏகாதசி
ம	24	10	திங்	ஏகா 28-14, பர 51-2, தி 16-37, வைகுண்ட
சி	25	11	செவ்	துவா 24-28, * கிரு 49-17, தி 25-10.
சி	26	12	புத	திர 21-40, ரோ 48-31, ரா 1-40.
ம	27	13	வி	சதுர் 20-0, மிரு 48-52, ரா 2-34. (தரிசனம்.
ம	28	14	வெ	○ 19-33, திரு 50-27, ரா 10-23, ஆருத்ரா
சி	29	15	சனி	பிர 20-21, புன 53-15, தி 20-51.
சி	30	16	ஞா	துவி 22-28, பூசம் 57-18, தி 24-36.
சி	31	17	திங்	திரி 25-49, ஆயி 60-0, ரா 4-33.
சி	1	18	செ	சதுர் 35-9, ஆயி 5-49, பி 48-32.
சி	2	19	புத	பஞ் 41-5, மக 12-31, ஆயி 50-19.
சி	3	20	வி	ஷஷ்டி 47-25, பூரம் 19-47, ஸப் 52-23.
சி	4	21	வெ	ஸப் 59-40, உத்தி 27-10, சோ 54-21.
ம	5	22	சனி	அசு 59-13, ஹஸ் 34-8, அஷ் 55-49.
சி	6	23	ஞா	நவமி 60-0, சித் 40-9, சுவா 56-24.
அ	7	24	திங்	நவ 3-36, சுவா 44-48, திர 55-50.
ம	8	25	செவ்	தச 6-24, விரு 47-43, சூரி 53-53.
அ	9	26	புத	ஏகா 7-20, அசு 48-49, சதுர் 50-27.
பி	10	27	வி	துவா 6-22, கேட் 48-6, விசா 45-35.
அ	11	28	வெ	திர 3-35, மூலம் 45-46, துவா 39-22. சதுர் 59-9.
சி	12	29	சனி	● 53-23, பூசம் 41-57, விசா 32-0, அமாவாசை தர்ப்பணம்.

1918-ஜனவரி

இயற்கை அமைப்பு-2

இரண்டாவதாக இயங்கியற் பொருள்களாகிய மிருகதோற்றங்களை ஆராய்வோமாக. இனி, மிருக தோற்றங்கள், ஊர்வன, பறப்பன, நடப்பன, நீர் வாழ்வன எனப்பல வகைப்படும். இவைகள், கருப்பையிலேயும், முட்டையிலேயும், வேர்வையிலேயும் பிறப்பன.

1. இவற்றுள் ஊர்வனவற்றுக்கு இன்றியமையாது வேண்டப்படும் பல சிறு கால்களும், முதுகெலும்பும், நீண்டவடிவும் பிறவும் அவ்வவற்றுக்கு வேண்டிய வேண்டிய பிரமாணப்படி கொடுக்கப்பட்டிருத்தலும், பட்சி சாலங்களுக்குப் பறத்தற்றொழிற்கியைந்த சிறகுகளும், அவயவ ஆகிருதியும், அவ்வவற்றின் பிரமாணங்களும், ஆங்காங்கே தகுந்த கணித முறைப்படி கொடுக்கப்பட்டிருத்தலும், நடப்பனவற்றுக்கு நடத்தற்றொழிற்கு வேண்டிய காற்பெலம், குளம்பு, பாதம், விரல், அவயவ ஆகிருதி, அவயவ அளவை முதலிய ஏதுக்களெல்லாம் பிரமாண அளவை பிறழாது அதிசாதுரிய சம்பந்தமாக அமைக்கப்பட்டிருத்தலும், நீர்வாழ் செந்துகளுக்கு நீந்துதற்கு வேண்டப்படும் கருவிகளாகிய செதிள், சுவாசமடக்குமியல்பு முதலிய ஏதுக்கள் பலவும் அமைந்திருத்தலும் பிறவுமாகிய இவற்றையெல்லாம் சிந்திப்பாமெனில், கடவுளது விசித்திர விநோதங்கள் நன்கு புலப்படும்.

2. மிருகபக்ஷணை விலங்குகளுக்கு இன்றியமையாது வேண்டப்படும் கூர்ந்த தந்த வரிசையும், நகவலிமையும், மூர்க்ககுணமும், மிருக போசனத்திற்கே இயைந்த இரைப்பையும் அமைந்திருத்தலும், தாவர பக்ஷண விலங்குகளுக்கு இவ்வியல்பினவாகிய நகமுதலிய புறத்துறுப்புகளும் மூர்க்ககுணம் முதலிய அகத்துறுப்புகளு மின்றி, சாந்த குணமும், தாவரங்களிற் சீவித்தற் கியைந்த இயல்பும், அவ்வுணவுக்கே இயைந்த இரைப்பையும், பிறவும் அமைந்திருத்தலும் கூர்ந்து கவனிக்கத் தக்கன.

3. பட்சி சாலங்களுக்கு, பிற மிருகங்களுக்குப் போலல்லாது பறத்தற் றொழிற்கே இயைந்த தலையும், அலகும், கால்களும் தக்க ஆகிருதப்படியும் பிரமாணத்தோடும் உரிய தானங்களிலே அமைந்திருத்தலும் இவற்றின் வாயிலே பல்வரிசை உண்

டாமெனில் அஃதிவற்றின் பறத்தற்றொழிலுக்குப் பேரிழுக்
காய் முடியுமென்பது கருதி அப்பற்கள் அங்கே அமைக்கப்
படாது கிடத்தலும், இங்ஙனமாயினும் இப்பட்சி சாலங்கள்
தமது உணவைப் பொடி படுத்தற்குரிய திறமை இவற்றின் அல
குகளிலே அமைக்கப்பட்டிருத்தலும், பறத்தற் றொழிலைப்
பூண்டுள்ள இந்தப்பட்சிகள் நடக்குந்திறனு முடையனவாமாறு
அவ்வவற்றின் அவயவ ஆகிருதி பிரமாணங்களை எடுத்துச் சீர்
தூக்கி இயைந்த இயைந்த தானங்களிலே பறத்தலும் நடத்த
லுமாகிய இரண்டற்கும் இயைபுடையனவாகிய மெல்லிய கால்
கள் பிரமாண அளவைகளிற் சிறிதும் பிறழாது அமைந்து கிட
த்தலும் வியக்கத்தக்கனவேயாம். ஒரு காகிதக் காற்றாடியை
அமைத்துக் காற்றிற் பறக்கவிடுதற்கு எத்துணையோ அளவைப்
பிரமாண யுக்தி சாதனைகள் வேண்டப்படுமென்றால் இப்பட்சி
சாலங்கள் ஆகாயத்தே அதி விநோதமாகப் பறந்து விளையாடு
மாறு இவற்றின் அவயவ ஆகிருதிப் பிரமாணங்கள் அமைந்
திருத்தல் எவ்வளவு அதிசயத்தைத் தரக் கூடியது !!

4. இனி மிருகங்களின் உடம்பை நோக்குழி யார்தாம்
பிரமையுறார்? தேவகம்மியரால் அமைக்கப்பட்ட சித்திரமண்ட
பங்களினும் மகா விசித்திர விநோதங்கொண்டு, என்புகளால்
பூட்டி, நரம்புகளால் மாட்டி, தசையாற் பொதிந்து, தோலால்
வேய்ந்து, சொல்லுதற் கடங்காத பலப்பல அதி நூதனமாட
கூடாதி வனப்புகளெல்லாம் வாய்ந்து—இந்த மாட கூடாதிகள்
அனைத்தும் கணந்தோறும் வளர்ந்து கொண்டே இருப்பவும்,
இவ்வளர்ச்சியினால் இவைகள் சிறிதேனும் பங்கமுறாது தத்த
மக்குரிய விநோத ஆச்சரிய நிலையிலே நிலைபெற்று விருத்தியுற்
றோங்கும் பேராச்சரிய இயற்கை அமைந்து——அதி துல்லிய,
அதி நூதன, அதி சூக்கும விநோதங்கள் வாய்ந்துள்ள மகா யந்
திரங்களைப் போன்று, ஆங்காங்குள்ள அவ்வவ் வவயவங்க
ளெல்லாம் தத்தமக்குரிய ஒவ்வொரு தொழிலை இடைவீடின்
றிச் செய்து கொண்டிருப்ப இயக்குவார் ஒருவரின்றித் தானே
இயங்கிநிற்கும் இம்மகா அலங்கார விநோத மண்டபமாகிய
மிருகதேகம் தானே தற்செயலாக அமைந்ததென்று பிதற்று
வார் பித்தரன்றிப் பிறராவரோ? ஒரு சிறு வண்ணத்துப் பூச்
சியைத்தான் எடுத்து மிருக சாத்திர ஞானங்கொண்டு பரீக்ஷிப்
பாமெனின், அதன்கணுள்ள விநோத விசித்திரங்க ளெல்லாம்

ஓர் ஈராவியந்திரத்தின்கணுள்ளவற்றினும் மகா நூதனம் படைத்தனவாகக் காணப்படுமன்றே!

5. ஒரு வண்ணத்துப் பூச்சி முட்டைக்கண் உற்பத்தியாகிப் பூரண தசை அடைந்ததோர் செந்து வாந்துணையும் அதன்பால் நிகழும் விநோதங்களையும் விகாரங்களையும் சற்றே ஊன்றிச் சிந்திக்க. இந்தச் செந்துவுக்குரிய கருவானது ஒரு முட்டையுள் அமைந்து படி முறையே விருத்தியுற்று மயிர்க்குட்டியாகி, அம்மயிர்க்குட்டியி லிருந்து அதனோடு சிறிதும் ஒப்புமையில்லாத கூண்டுப் புழுத்தோன்றி, அதிலிருந்து மகா அலங்கார விசித்திர வர்ணம் கொண்ட இறகும் பிறவும் அமைந்துளதோர் வண்ணத்துப் பூச்சி உண்டாகும் மரபை என்னென்று சொல்வது! இன்னமும் இவ்வற்பசெந்து மயிர்க்குட்டி நிலையில் இருக்கும்போது கடின பதார்த்தங்களைத் தின்னும். வண்ணத்துப் பூச்சியானபின் நாவர சத்துக்களே இதனுக்கு ஆகாரமாகும். இருதசையிலும் அவ்வப்பதார்த்தங்களைப் பொடி படுத்தவும் ஜீரணஞ்செய்யவும் உரிய கருவிகள் அவ்வக்காலததே அமையு முறையும், இக்கருவிகளிற் காணப்படும் அதிசூக்கும நுண்மையும், கிரமமும், எத்துணை விசிட்டம்பூண்ட யந்திரங்களினும் காண்டற்கரிய அத்தியற்புத அதிவிசித்திர விநோதங்களும் உற்று நோக்கற் பாலன.

6. பேரியந்திரங்களிற் காணப்படும் விநோதாச்சிரியங்களினும் சிற்றியந்திரங்களிற் காணப்படுவனவே பெரிது பாராட்டப் படுவன. யானைமுதலிய பெரு விலங்குகளிலே காணப்படும் காட்சி, கேள்வி, உணர்ச்சி முதலிய புலங்களுக்குரிய அங்கங்களும், உணவுகளை அரைத்தல், பதஞ்செய்தல், இரைப்பையுட் புகட்டல் முதலிய தொழில்களுக்குரிய கருவிகளும், அங்ஙனம் புகட்டப் பெற்ற உணவுகளை எத்தனையோ திறப்பட்ட பக்குவங்களை வருவித்து, கழிவுகளை நீக்கி, எஞ்சியதை உடம்புக்குரிய சத்துகளாக்கி உடம்பெங்கணும் கொண்டு செலுத்தவல்ல அதிநூதன கருவிகளும், எறும்பினும் மகா நுண்ணிய அல்ப செந்துக்களினும் குறைவின்றி மிக நுண்ணிதாக அமைக்கப்பட்டிருத்தலைக் காணும்போது, இந்த நுணுக்க விசித்திரங்களைப் பிறரால் அமைக்க வல்லதோர் கடவுளின் சக்தியை என்னென்று எடுத்தோதுவது!

7. மனிதரால் ஆக்கப்படும் எவ்வளவு சிறந்த யந்திரமும் இயங்க இயங்கக் கணந்தோறும் தேய்வுற்றுக் காலாந்தரத்தில் ஒருங்கே பழுது பட்டழியும். இங்ஙனம் விரைவிற்பழுதுறாவாறு இவை யெல்லாம் இடையிடையே எண்ணெய் முதலிய பதார்த்தங்கள் ஊட்டப் பெறும். மிருகதேகமாகிய யந்திரமும், இங்ஙனமே இயங்குந் தோறும் தன்பாலுள்ள நாடி முதலிய கருவிகள் தேய்வுற்றருகும். இக்குறைவை நிறைவு செய்யுமாறு அந்தந்த யந்திரத்திற்றனே அதன் பொருட்டு வேண்டப்படும் பதார்த்தங்கள் அவ்வக்கணத்திலே வந்து பொருந்துமாறு அமைக்கப்பட்டிருக்குமென்றால், இதன் மாட்சி எத்துணைப் பேரதிசயத்துக் கிடமானது? மிருகதேகமாகிய யந்திரத்தின்கண் தேய்வினுண்டாகும் இக்குறைவை அவ்வப்போது திற்றனே அந்தந்த மிருகங்களுக் குணர்த்தவல்ல பசி எனப்படும் ஓர் சிறந்த உபாயத்தை அவற்றினிடம் அமைத்து, அது காரணமாக அக்குறைவு நிறைபெறுமாறு நாட்டப்பெற்றுள. இந்த மதிமாட்சி எத்துணைச்சிறந்த விவேகத்தின் பயனாயிருத்தல் வேண்டும்!! பசிதாகங்கள் மிகச் சாதாரணமான உணர்ச்சிகளாதல் பற்றி இவற்றின் தலைமையை நாம் உள்ளவாறு சிந்திப்பதில்லை. ஆனால் அவற்றைக் குறித்துச் சிறிது ஊன்றிச் சிந்தித்தால், அவற்றின் பெரும் பிரயோசனம் பொள்ளெனப் புலப்படும். மிருகவர்க்கங்களிடத்தே பசி தாகங்களாகிய உணர்ச்சிகள் அமைக்கப்பட்டிருத்தலினாற்றான், அந்த வர்க்கங்கள் உலகத்தின் கண்ணே நிலைபெற்றுப் பல்குவன வாயின. இளங்குழவிகள், தம் தேகத்தின் கண் நிகழ்ந்துள குறைகளை பசிதாகங் காரணமாக அறிந்து தம் பெற்றார்க் குணர்த்த அப்பெற்றாரும் அவ்வப்போது அவற்றுக் கியைந்த போசனாதிகள் தந்து போஷிக்காவிடின் மிருகவர்க்கங்கள் அழிவதன்றி, உலகத்துப் பல்குமாறில்லையாகும். மிருகங்கள் தமது தேகத்தின் கண் எய்தியுள்ள குறைகளைக் கண்ணாரக் கண்டறிதல் கூடாதாகவும் அவற்றை அவைகளுக்குத் தடையின்றி உணர்த்துமாறும் அது வாயிலாக அவைகள் போசனாதிகளை உட்கொண்டு அந்தக் குறைகளை யெல்லாம் நிறைவு படுத்தித் தங்கள் தேக யந்திரங்களைப் பூரண நிலையில் வைத்துக் கொள்ளுமாறும் அமைக்கப்பட்ட பசிதாகங்களாகிய உபாயங்களை நாம் சிந்திப்பாமெனில், கடவுளின் பேரருள் நன்றாய்விளங்கும்.

8. யந்திரங்களிலே அமைக்கப்படும் கருவிகளெல்லாம் பிரமாண அளவைகள் பற்றி ஒன்றற்கொன்று ஏற்புடைத்தாக அமைக்கப் படுதற்கு மிகச்சிறந்த கணிதவியுற்பத்தி வேண்டப் படும். இங்ஙனமாகிய வியுற்பத்திக் கிரமங்கள் அளவிறந்தன மிருகதோற்றங்களில் அமைக்கப்பட் டிருக்கக் காண்கின்றோம். நாற்கால் விலங்குகளின் முற்கால்கள் இரண்டும் ஓர் அளவாயும் முற்கால்கள் பிற்கால்களுக்கியைந்த அளவாயும், அமைக்கப் படாதிருந்தால் அம்மிருகங்கள் நடத்தல் கூடுமேயோ? ஒரு காலின் மற்றொருநகால் ஒரு நெற்பிரமாண மாயினும் குறைந்தாவது, கூடியாவதிருந்தால், அவற்றைக் கொண்டுள மிருகம் எத் துணைச் சங்கடத்துக்காளாய் முடவிக் கொண்டழுந்த வரும்? இன்னமும் இந்தக்கால்கள், அவ்வவ் வுடம்பின் கனத்தைத் தாங்குதற் கியைந்த பெலமுடையனவாய், அவற்றைத் தாங்குதற் குரிய தானங்களிலே அமைக்கப் படுதற்கு எத்துணைச் சிறந்த கணித வியுற்பத்தி வேண்டப்படும்?

ஓர் பேடகத்தைத் தாங்குமாறு அமைக்கப்படும் கால்களிலே சம அளவு அமைத்தற்கும், அவற்றைத் தக்க தானங்களிலே இயைத்தற்கும், அவற்றிலே அப்பேடகத்துக் கியைந்த பெலத்தை நிறுத்தற்கும் எத்துணைச் சிறந்த விவேகசாதனை வேண்டப்படு மென்பது நாமெல்லாம் அனுபவங் கொண்டு நன்கு நிச்சயிக்கக் கிடக்கின்றது. ஒரு பேடகத்திலும் மகா விசிட்டம் பூண்டுள மிருக தேகத்தை அது அதற்குரிய கால்களிலே நிறுத்துதற்கும், அம்மட்டோ, அங்ஙனம் நிறுத்தி அவைகளை எந்தப் பக்கத்திலாயினும் தள்ளுற வொட்டாது சேர்ப்படுத்தி இயக்கி நடாத்துதற்கும், எத்துணை அளவைப் பிரமாண நிச்சயங்களும் எத்துணைச் சாத்திர வரையறைகளும் வேண்டப்படும்? ஒரு சிறு தேகத்திற்றானும் இதுபோற் பன்னூறு கணித வியுற்பத்திக் கியைந்த விநோதங்கள் காணப்படுமாயின் பல்லாயிர தேகங்களில் அமைந்துள இந்த வியுற்பத்திகளெல்லாம் கடவுளின் உண்மையை நிலைநாட்டுவன.

ஜ.

கண்ணீற்றுச் சொற்கள்

ஒரு பொருள் எவ்வளவு மிகுதியாகப் பயன்பட்டு வருகின்றதோ அவ்வளவிற் கேற்பவே அது நமக்கு இன்பம் கொடுக்கவும் கூடும். எந்தப் பொருளின் வழியாக இன்பமும் பயனும் எளிதாகவும் ஏராளமாகவும் நாம் அடைகின்றோமோ அந்தப் பொருளை மிகவும் அருமையாகப் பாராட்டுகின்றோம். இது மக்கள் இயற்கை. நமது கண்ணானது நமக்கு மிகவும் பயன் படுகின்றது; அதன் வழியாக நாம் பேரளவாக இன்பம் பெறுகின்றோம். அதுபற்றியே, அதை அருமையான பொருளாகக்கொண்டாடுகின்றோம். "எண்சாண் உடம்பிற்குத் தலையேசிறந்தது; தலையிற் கண்ணே சிறந்தது" என்பர் வடநூலார். "கண்ணிற்சிறந்த உறுப்பில்லை" என்றார் பொய்யா மொழிப்புலவர். அரியபொருளுக்கு அநேகபெயர்கள் இருக்க வேண்டுமே! ஆதலால், விழி நாட்டம் நோக்கம் பார்வை நயனம் அக்கம் திட்டி எனக்கண்ணிற்குப் பல பெயர்கள் வழங்குகின்றன. கண்ணை மிகவும் அரிய பொருளாக உலகம் போற்றுகின்றபடியாலே தான் அருமையாகவும் பெருமையாகவும் நாம் நன்குமதிக்கும் வேறெந்தப் பொருளுக்கும் அதன் பெயரை வைத்து அழைக்கின்றோம். நமது அன்புக்குரிய காதலரைக்'கண்ணே! கண்மணி!' என்றும், கண்ணன் கண்ணாட்டி கணவன் கண்ணப்பன் கண்ணம்மை என்றும் அழைக்கும் பெயரெல்லாம் அருமை குறிப்பனவையே அல்லவோ? இஃது உலக வழக்கு.

இவ்வாறே செய்யுள் வழக்கினும் கண்ணென்னும் சொல்லானது அருமை குறிக்கும்படி உவமையாகவும் உருவகமாகவும் பலவிடத்தும் வழங்கி வருகின்றது.

1. "கண்ணுடையோர் என்போர் கற்றோர்."
2. "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
 கண்ணென்ப வாழும் உயிர்க்கு."
3. "கரவாத திண்ணன்பின் கண்ணன்னார் கண்ணும்
 இரவாது வாழ்வதாம் வாழ்க்கை."
4. "கண்ணுள் மணியேபோல் காதலால் நாட்டாரும்
 கண்ணுந் துணையிற் பிறராகி நிற்பரால்"
5. "கற்றோர் பல்லைத்தன் கண்ணாக இல்லாதான்"

6. "கண்ணுவார் எனும்உனைக் கைதுவியார் ஆயின் அந்த
மண்ணுவார் நட்டை மதியேன் பராபரமே."

எனவரும் அருந்தொடர்களெல்லாம் அருமையை அறிவிப்பதற்கும் உயர்வை உணர்த்துவதற்கும் எழுந்துள்ளன.

இனி, நமது மனத்திற்கு இனியாரைக் கண்ட இடமும் காலமும் மறுபடியும் கண்டாலும் கருதினுலும் இன்பம் தருமாதலால், அந்த இடத்தையும் காலத்தையும் உயர்வாக மதித்து வந்தார் நம் முன்னேர். அது பற்றியே அவற்றை அவர், கண்ணென்னும் சொல்லால் சுட்டி வழங்கினர். இதனைப் பண்டைத் தமிழ் நூல்களில் பயில்வோர் யாவரும் ஆராய்ந்து அறியலாம்.

"அரியகற்றுசற்றர் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு"—என்ற இடத்தே கண்ணனது பெயரை அடுத்து நின்று இடத்தைச் சிறப்பித்தும்,

"குடி கொழுத்தக் கண்ணும் கொடுத்துண்ணு மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றுப்பனை" என்ற இடத்தே அது வினையை அடுத்து நின்று காலத்தைச் சிறப்பித்தும் வந்தமை காண்க. இடத்தைச் சிறப்பிக்க ஒரு பெயரை அடுத்து வருங்கால் ஏழாம் வேற்றுமை யுருபென்றும், காலத்தைச் சிறப்பிக்க ஒரு வினையை அடுத்து வருங்கால்வினையெச்ச விகுதி யென்றும் அது பெயர் பெறும். இக்காலத்தில் இந்த அரிய வழக்கு மறந்து போயிற்று. மற்று, சிறந்த இடத்தைச் சுட்டுதற்கன்றி, பொதுவாக ஏழாம் வேற்றுமை சுட்டும்படி, இப்பொழுதும் கண்ணுருபு பெயரொடு வழங்கி வருகின்றது. ஆயினும், அது வினையொடு வரும் வழக்கம் அடியோடு அழிந்து போயிற்று. இது நிற்க.

அன்பு அச்சம் அழுகை அழிவு அவலம் அறிவு முதலான குணங்களும் இவற்றின் எதிரான குணங்களும் கருத்தும்பொருளான மெய்ப்பாட்டுக் குணங்களாம்; ஆதலால், இவற்றில் ஏதேனும் ஒன்று ஒருவரிடத்தில் உளதா இலதா என்பதை அவர் முகத்தை நோக்கியே எளிதாக உணர்ந்து கொள்கின்றோம். அவ்வாறு உணர்ந்துகொள்ளும் பொழுது, நமக்குப் பெருந்துணையாக நின்று அவர் குணத்தை உள்ளபடி ஒளியாமல் அறிவிப்பது அவர் கண்ணே யன்றி வேறு உறுப்புக்கள் அல்ல.

ஆகையாலேதான், மக்களுடைய பலவேறு குணங்களைக் காட்டுதற்குப் பல கண்ணீற்றுச் சொற்கள் பிறந்து, பயிலாநிற்கின்றன. அவற்றுள், சிலவற்றின் பொருளையும் வழக்கையும் இங்கே புகலுவோமாக.

1. அலக்கண்=கலங்கிய கண்; துன்பத்துக்குக் காரணக் குறி—இலக்கணையால் வந்தது.

"சங்கலங்குந் தடங்கடல்வாய் விடஞ்சுடவந்தமரர் தொழ
அங்கலக்கண் தீர்த்தவ்விடம் உண்டுகந்த அம்மானை
இங்கலக்கும் உடற்பிறந்த அறிவிலியேன் செறிவின்றி
எங்குலக்கப் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே"
—சு. தேவாரம்.

2. அறக்கண்=தரும பிரபு; அருள் வைப்பு எனவுமாம்.

"பறக்குமெம் கிள்ளைகாள்! பாடும் எம் பூவைகாள்!
அறக்கண் என்னத்தகும் அடிகள் ஆரூரரை
மறக்ககில்லாமையும் வளைகள் நில்லாமையும்
உறக்கமில்லாமையும் உணர்த்த வல்லீர்களே."
—சு. தேவாரம்

3. இடுக்கண்=இடுங்குகண்; விகாரம்-மலர்ந்த முகம் ஒழிந்து கண் இடுங்கும்படி உறுவது எனத் துன்பத்துக்குக் காரணக் குறி.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"—திருக்குறள்.

4. உறுகண்=துன்பம். உறல் என்னும் சொல் துக்கத்தை அடைதற்குரிய வினை-இதன் எதிர்மொழியாகிய பெறல் என்பது சுகத்தை அடைதற்குரிய வினை. இஃது இவ்வாறென்பதை உறு பெறு எனும் பகுதியடியாகப் பிறந்த ஊறு பேறு என்னும் பெயர்கள் முறையே துன்பம் இன்பம் என்னும் பொருளிலே வழங்குதல் நோக்கித் தெளிக.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"—திருக்குறள்.

5. களைகண்=புகல்; பற்றுக்கோடு துன்பத்தைக் களையும் இடம் எனக் காரணக்குறி; வினைத்தொகை.

"பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து பாழுக்கே நீர் இறைத்தேன்;
உற்றலால் கயவர் தேறார் என்னும் கட்டுரையோ டொத்தேன்;
எற்றுளேன்; என்செய்கேன் நான்? இடும்பையால் ஞானமேதும்
கற்றிலேன்; களைகண் இல்லேன்; கடவூர் வீரட்டனாரே!"

—அ-தேவாரம்.

6. தறுகண் = அஞ்சாத்தன்மை.

"இறுவரை வீழ இயக்கற் றவிந்த
தறுகட் டகை அரிமா போன்றான்—சிறுகட்
பெருங்கைக் களிறெறிந்து பின்னதன் கீழ்ப்பட்ட
கருங்கழற் செவ்வேலவன்" —புற-வெண்பா.

7. பழங்கண் = வறுமை; மெலிவு.

"கன்றுபுணர் பிடிய குன்றுபல நீந்தி
வந்தவண் இறுத்த இரும்பேர் ஒக்கல்
தொல்பசி உழந்த பழங்கண் வீழ" —பதிற்று.

8. புதுக்கண் = செதுக்கண்.

"மையல் யானை வயாஉயிர்த் தன்ன
நெய்யுலை சொரிந்த மையூன் ஓசை
புதுக்கண் மாக்கள் செதுக்கண் ஆரப்
பயந்தனை மன்னால் முன்னே" —புறம்.

'ஓசை-பொரியல்-புதுக்கண் என்பதில் கண் அசை. செதுக்கண்-ஒளி மழுங்கின கண்; செதுகின சுடர் என்றுமாம்' என்றார் உரைகாரர்.

9. புன்கண் வாட்டமுற்ற கண் எனத் துன்பத்துக்குக் காரணக்குறி.

"சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வமென் பதுவே" —நற்றிணை.

இச்சொல் முதற் குறையாய்க் கண்ணெனவும் வரும். "மற்றஞ்சாதே தின்ப தழுவதன் கண்" —பழமொழி.

10. முதுகண்.

"என்றும் அறனே களைகண் என்பர்"-இலக்கணை 130.

என்ற இடத்தே 'முதுகண் என்றாற்போல வழக்கு' எனக் கூறினார் ஆசிரியர் நச்சினார்க்கினியர். இதனானே முதுகண் என்றொரு சொல்லும் உண்டெனத் தெரிகின்றோம்.

11. வன்கண்=மறம்; இரக்கமின்மை. இதன் எதிர்மொழியாகிய மென் கண்ணுக்குக் கண்ணோட்டம் என்பது பொருள்.

"என்கண் இனையர் எனக்கருதின் ஏதமாம்:
தங்கண் ணராலும் தகவில கண்டக்கால்,
வன்கண்ண ளுகி ஒறுக்க ஒறுக்கல்லா
மென்கண்ணன் ஆளான் அரசு" —பழமொழி.

12. வெங்கண்=கொடுமை; வைராக்கியம்.
"வெங்கண் வேந்தற் கமிர்தாகி" —நாமகள்.

மேலே காட்டியவை யாவும் கண்ணெனும் சொல்லை விகுதிபோல ஈற்றிலே பெற்று வேறு சொல்லோடு சேர்ந்து, ஒரு சொல் நீர்மை யடைந்து, பெயர்களாகவே வழங்கிவருகின்றன.

இன்னும், அங்கண் விசும்பு, குறைக்கண் நெடும்போர், ஞெள்ளலாங்கண், ஈங்கண், ஊங்கண், யாங்கண், கழைக்கண் நெடுவரை என்பன போன்ற தொடர்கள் இடத்தையே சிறப்பித்து நிற்கின்றன.

இஃது இவ்வாருக, பெருங்கண் மான்பிணை, கருங்கண் எயிற்றி, கடுங்கண் கேழல், இருங்கண் எருமை, கொடுங்கண் இஞ்சி, நெடுங்கண் காக்கை, மழைக்கண் அரிவை, செங்கண் ஏற்றன், பைங்கண் வெள் அரவு, தீக்கண் உழுவை என்னும் இவைபோன்ற தொடர்களெல்லாம் சினையின் (கண்) தன்மையைக் காட்டவந்தன அல்ல; மற்று முதலின் (உயிர்கள்) குணத்தைக் குறிப்பாக உணர்த்தியே நிற்கின்றன. செங்கண்மால் என்பதற்கு 'செந்தாமரை மலர்போலும் அழகிய கண்களையுடைய திருமால்' எனப் பொருள் விரிக்கின்றோம். இவ்வகையான புன்னக்கிளவிகள் நம் தென்மொழியிலே பல உண்டு. இது நிற்க.

கடைக்கண், சிறங்கண், புறங்கண், பேழ்கண் முதலிய பெயர்கள் வினைப்படுத்தற் குரிய இகர விகுதியோடு புணர்ந்து, கடைக்கணி, சிறங்கணி, புறங்கணி, பேழ்கணி என முதனிலையாய் நின்று, இடைநிலையும் இறுதிநிலையும் பெற்று வருகின்றன.

1. கடைக்கணித்தல்-கடைக்கண்ணால் நோக்குதல்-(கடைக்கண்-கண்ணினது கடை) இச்சொல் நோக்குவான் உயர்வும், நோக்கப்படுவான் தாழ்வும் விளக்கிக்கொண்டே வருகின்றமையால், அருளுக்கு உரியனாக்குதல் என்ற அரும்பொருளையே உடைத்து.

"அருமந்ததேவர் அயன்திருமாற் கரியசிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்பெய்தக் கொண்டருளிக்
கருவெந்துவீழக் கடைக்கணித்து என் உளம்புகுந்த
திருவந்தவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ!"

—திருவாசகம்.

2. சிறங்கணித்தல்-அரைக் கண்ணால் நோக்குதல்.

"குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்"—திருக்குறள்.

'சிறக்கணித்தாள் என்பது செய்யுள் விகாரம். சிறங்கணித்தல் சுருங்குதல்' என்றார் பரிமேலழகினர்.

3. புறங்கணித்தல்-பராமுகம் செய்தல்,

"புனக்காவலின்முன் புகுத்திய அன்னை புறக்கணித்து
மனங்காவலின்மையின் இன்றுவைத்தாள் உயிர்வாழ்வகை"

—தணிகை.

4. பேழ்கணித்தல்-விழித்தல். இச்சொல், ஓர் அரிய பொருளைக் காலத்தே கொள்ளாது கையிழந்தவன் அடையும் மெய்ப்பாட்டைத் தெரிவிப்பது.

"பொசியாதோ கீழ்க்கொம்பு நிறைகுளம் என்பது போலத்
திசைநோக்கிப் பேழ்கணித்துச் 'சிவபெருமான் ஓ!' எனினும்
இசையானென் என்திறத்தும் எனை உடையாள் உரையாடாள்
நசையானேன்; திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே!"

—திருவிசை.

இதுவரையும் சொல்லிப் போந்தவற்றால்; கண்ணீற்றுச் சொற்கள் வந்த வாறும், அவற்றின் பொருட்பாடும், வழக்காறும் ஒருவாறு தெரிவித்ததாம் என்க.

மயிலை-சீனி. கோவிந்தராசன்.

ஆணவமல விடுதி

கடவுள் ஆன்மாக்களைப்பிறவிகளிற் செலுத்திச் சேட்டிப்பதெல்லாம் அவர்களை அநாதியே பந்தித்த ஆணவமலத்தைநீக்கி அவர்களுக்கு நித்தியானந்த முத்தி யின்பத்தைக் கொடுத்தற் பொருட் டென்பது சைவசமயக் கொள்கை. இந்தக் கொள்கையை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் இலராகிய கற்பனுசமயிகள் இதன்மீது பல ஆக்ஷேபங்களைத் தொடுப்பார்.

1. ஆணவமலபந்தம் அநாதிக்கண்ணதாமாயின், அது எப்போதாவது ஒழிவுறுவது கூடாதென்பது இவர்களது முதல் ஆக்ஷேபம். அநாதியாயுள்ள ஆணவமலம் நித்தியப் பொருளேயாம் என்பதை எமது சமயம் சம்பூரணமாக அங்கீகரிக்கும். அது பற்றியே ஆணவமலம் முத்திதசையிற்றானும் கெட்டொழிவ தில்லை என்று எமது சமயம் எடுத்து விளக்குவது.

முத்திதனின் மூன்று முதலு மொழியக்கேள்
சுத்தவனு போகத்தைத் துய்த்தலனு—மெத்தவே
இன்பங்கொடுத்தலிறையித்தை விளைவித்தன்மலம்
அன்புடனே கண்டு கொளப்பா.

—உண்மை விளக்கம்.

ஆணவமலம் நித்தியமாயுள்ளதாயினும் அதன் பந்தம் ஒழிவுற்றிடுமென்றே: அநாதியாகிய மலபந்தம் தான் ஒழிவுற்றிடுவ தெங்ஙனம் என்பீராயின், திருவருட் பிரகாசத்தின் முன் ஆணவமலம் தன்வலி குன்றி நிற்றலையே அதன் பந்த நீக்கம் என்று சாத்திரங்கள்சாதிப்பது. ஆகவே அதன் பந்தம் தானும் உண்மை யளவில் அழிவுற்ற தெனப்படமாட்டாது. அநாதியாயுள்ள அதன் வலிதான் இடையிற் குன்றுவதெங்ஙனம் என்பீராயின், அந்த வலிதானும் அநாதியாகத் தன்னிடத்துள்ள யாதொரு குணத்திற் குறைவுற்ற தன்றும். சூரிய சந்நிதியின் அப்பிரகாசமுற்ற தீபம்போலத் திருவருட் சத்தியின் முன்னே மலசத்தி அப்பிரகாசமுற்று நிற்றலையே அதன் வலிகுன்றிய தெனச்சாத்திரங்கள் சாதிப்ப தென்க.

திருவருட் பிரகாசத்தின் முன் மலசத்தி வலி அடங்கி நிற்றலே அதன் இயற்கைத் தருமமாதலால், அந்தச் சத்தி தனது இயற்கைத் தரும வழிநின்றே அருட்பிரகாசத்தின் முன் வலி அடங்கி நிற்றல்பற்றி யாதொரு உண்மையாவது பாதிக்கப்பட மாட்டா தென்பது காண்க.

இன்னமும் நமது கற்பனுசமயிகள் தத்துவ தாத்துவீகங்களின் பொருட்டன்மைகளையும், அவற்றைச் சாதித்தற்குரிய ஏதுக்களையும் உள்ளிட்டாராயும் ஆற்றலின்மையால் "அநாதியா யுள்ளது அழிவுற

மாட்டாது'' எனத் தத்துவ சாஸ்திரங்கள் எடுத்துக்கூறும் வாக்கியத்தின் உண்மைப்பொருளை அறியாது பெரிதும் மலைவுறுகின்றார்கள். ''அநாதியாயுள்ளது அழிவுறமாட்டாது'' என்னும் உண்மையைச்சாதித்தற்குறிய ஏது தான் யாது என்பதை இவர் ஆராய்ந்து நோக்குவதுண்டாயின், இந்த உண்மை எவ்வெப் பதார்த்தங்கள் அளவில் சாதித்தற் குரியது என்பது இவர்களுக்கு இனிது புலப்படும். அநாதியாயுள்ளதொரு பொருளுக்கு எப்போதாவது ஒரு தோற்றமில்லை-ஆகவே அதற்கொரு முதற்காரணம் இல்லை—ஆகவே அது அந்த முதற்காரணத்தில் ஒடுங்குவதும் இல்லை. இது பற்றியே ''அநாதியாயுள்ளது அழிவுறமாட்டாது'' என்னும் உண்மை சாதிக்கப்படுவது. ஆகவே, நாம் வேறோரிடத்தில் எடுத்துக்காட்டியபடி, இந்த உண்மை முதற்காரணத்தை அவாவி நிற்றற்குரிய திரவியங்கள் அளவில் எடுத்தாளத்தக்க தன்றி, திரவியங்கள் அல்லாத தொழில் குணம் என்றிவற்றளவில் எடுத்தாளத் தக்கதல்ல. எனவே, ''அநாதியாயுள்ளது அழிவுறமாட்டாது''என்னும் நியாயம், ஆணவமலம் தன்வலி குன்றுதலாகிய செயலளவில் ஒருபோதும் எடுத்தாளுதற்குரிய தன்றென்பதை நமது கற்பனு சமயிகள் அறிய வல்லுநராயின், ஆணவமலத்தைப் பற்றிய மயக்கம் இவர்களை விட்டு நீங்கி விடும்.

இஃதுண்மையாயினும் அநாதி தொட்டுப் பிரகாசியாது கிடந்த அருட்சத்தி இப்போது புதுவதாகப் பிரகாசிப்ப தெங்ஙனம் எனச்சிலர் வினுவுதல் கூடும். இந்த அருட்பிரகாசம் தானும் புதுவதாக முளைப்ப தொன்றல்ல;இதுவும் அநாதி தொட்டே எங்கும் பரிபூரணமாக நிறைந்துள்ளது. ஆயினும் இதன் பிரகாசத்தை ஆன்மாக்கள் அனுபவிக்கும் தகுதியிலராகக்கிடத்தல் பற்றி, அவரைப் பற்றிய மலசத்தியும் வலிகுன்றாது நிலைபெறுவதாயிற்று. பிறவிதோறும் ஈட்டும் புண்ணியங்கள் வாயிலாக அவர்கள் திருவருட்பிரகாசத்தை அனுபவிக்கும் தகுதிபடைக்கவே, ஆணவமல சத்தியும் படி முறையாக வலிகுன்றி, இறுதியிலே ஒருங்கடங்கி, அவர்களை முத்திப்பேற்றுக் குரியவர்களாக்கி விடும்.

ஆணவமலசத்தி திருவருட் பிரகாசத்தின் முன் வலிகுன்றுதலைத் தனது இயற்கைத் தருமமாகக் கொண்டிருத்தல் போலவே, ஆன்மாக்களும் திருவருட் பிரகாசத்தை அனுபவித்தற்குரிய தகுதியைத் தமக்கு இயற்கைத் தருமமாகக் கொண்டுள்ளார்கள். இந்தத் தருமம் ஆணவமல மறைப்பால் மூடுண்டு கிடத்தலால், அவர்கள் அந்த அருட்பிரகாசத்தை அனுபவியாராயினர். அங்ஙனமாயினும் மாயை காரணமாக அவர்களுடைய அறிவு தொழில் ஒரு சிறிது விளக்கப்படுமிடத்து,அவர்கள் தங்கள் தங்கள் மலபந்தத்தின் ஏற்றக் குறைவுக்குத் தக்கதாக, அந்தத் திருவருட் சத்தியை அனுபவிக்கும் ஆற்றல் உடையராகின்றார். இது பற்றியே அவர்களுக்கு முதல்வன் மாயையில் நின்று தனுகரணுதிகளைக் கொடுத்துச் சேட்டித்துத் திருவருளை அனுபவிக்கச்செய்து

அவர்களைப் பந்தித்த ஆணவமலத்தைப் படிமுறையாக வலிகுன்றச் செய்து, அவர்களுக்குக் காலாந்தரத்திலே முத்திப் பெரும் பயனைக் கொடுத்தருள்வன்.

ஆன்மாக்கள் திருவருளை அனுபவிக்கு முறையும் பொதுவும் சிறப்புமென இருவகைப்படும். இறைவன் உயிர்க்குயிராய் நின்று ஆன்மாக்களை இயக்க, இயக்கப்படுவனவாகிய ஆன்மாக்கள், தம்மை இயக்கும் திருவருளை, அவ்வியக்கம் காரணமாக அனுபவிப்பது எல்லா ஆன்மாக்கட்கும் பொதுவாகிய பொதுமுறை எனப்படும். இனி இங்ஙனம் இயங்கும் ஆன்மாக்கள் தத்தம் தகுதியளவாகத் தாம் இயங்குமிடத்துச் செய்யும் நல்வினைகள் காரணமாகத் திருவருளை விசேடமாக அனுபவிப்பது சிறப்புமுறை எனப்படும். இந்த இரண்டு முறைகளாலும் ஆன்மாக்கள் திருவருளை அனுபவிக்கும் அளவாக அவர்களைப் பந்தித்துள்ள ஆணவமலம் காலந்தோறும்சிறிது சிறிதாகத்தனது சத்தி வலி குன்றப்பெற்று, இறுதியிலே ஒருங்கே வலிகுன்ற, அவ்வான்மாக்கள் இறைவனுடைய திருவடி நீழலை அடைந்து பேரின்பம் அனுபவித்துக் கொண்டிருக்கும்.

இதெல்லாம் ஒக்குமாயினும் இதுகாறும் தன்வலிகுன்றாத ஆணவமலம், இனி ஒருகாலத்து அங்ஙனம் குன்றுமென நாம் காத்திருப்பது எங்ஙனம் என்பீராயின், ஆணவமல சத்திகளோ அநந்தம்; இறைவனுடைய திருவருட் பிரகாசமோ அளவற்றது. ஆகவே ஆணவ மலத்தின் அனந்தவலி குன்றித் திருவருளின் அநந்த பிரகாசத்தைத தரிசித்தற்கும் அநந்தகாலமே வேண்டப்படும். அவ்வநந்த காலத்தை நாம் எமது சிற்றறிவு கொண்டு அளத்தல் கூடாது. ஆனால் இறைவனுடைய திருவருள் எப்போதும் எம்மீது சுரந்து கொண்டிருத்தலால், இந்த ஆணவ மலசத்தி ஒரு காலத்து ஒருங்கேகுன்றி நாம் திருவருட் குரியராவேம் என்பதில் சிறிதும் தடையில்லை என்க.

இதுகாறும் சென்ற காலந்தான் எத்துணைக் காலத்துக்கும் இடங் கொடுத்து அப்பாலும் செல்லுமாதலால், ஆணவமலம் ஒழிவுறுதற்கு இது காறும் சென்ற காலம் போதிய தன்றென்பது கூடாதன்றே என்பீராயின், இது காறும் சென்றகாலமும் எம்மைப் பந்தித்த ஆணவமல சத்தியுமாகிய இரண்டும் அளவற்றன வாதலால், அவற்றுள் எது பெரிதென்பது நாம் எமது சிற்றறிவுகொண்டு சொல்லத் தக்கதல்ல. பேரறிவாளனாகிய இறைவனே அதை அறிய வல்லுநன். ஆயினும் ஆணவ மலம் இன்னும் ஒழிந்திலாமைபற்றி, அம்மலசத்தியின் அளவின்மை இதுகாறும் சென்ற காலத்தினது அளவின்மையினும் விஞ்சியதென்று மாத்திரமே நாம் ஒருவாறு சொல்லத்தக்கது. அளவின்மையை நாம் அளப்பது கூடாதாயினும், நாம் முன்னோரிடத்திலே எடுத்துக் காட்டியபடி, அளவற்றதொன்று அளவற்ற பின்னொரு பொருளிலும் பார்க்

கக் கூடியுமிருக்கலாம் குறைந்து மிருக்கலாம். அநாதிதொட்டு இதுகாறும் சென்றுளகாலத்தினும், அத்தோடு இன்னும் சிலகாலத்தைச்சேர்த்தலாற் பெறப்படும் காலம் நீடியதே யாதலால், இதுகாறும் ஒழிவுறாத ஆணவமலம் இன்னும் சிலகாலம் செல்ல அழிவுறுதல் இனிது கூடும். ஆகவே, இறந்துபோன காலம் அளவில்லா தாதல்பற்றி, ஆணவமலம் இனிவரும் காலத்தும் ஒழியமாட்டா தென்பது ஒருவாற்றானும் பெறப்படமாட்டா தென்க. உண்மையை நுணித்து நோக்குவ துண்டாயின், ஆணவமலத்தின் நீக்கத்தையாவது திருவருட் பிரசாதத்தின் ஆக்கத்தையாவது நாம் காலதத்துவங் கொண்டு அளத்தல் கூடாதென்பது உண்மைநூற் றுறையிற் பயின்றார்க்கு இனிது புலப்படும். தத்துவக் கிரமங்களை ஆராய்வதுண்டேல், அசுத்தமாயையிற் றோன்றும் காலதத்துவம் கொண்டு, சுத்த மாயைக்கு அப்பால் நிகழும் ஆணவமல விடுதியையாவது, அதனுக்கும் அப்பால் நிகழும் சிவானுபவத்தை யாவது வரையறுப்பது கூடாதென்பது இனிது புலப்படும் என்க. இந்த உண்மைதத்துவ ஞானந் தலைப்பட்டார்க்கன்றி ஏனையோர்க்குப் புலப்படமாட்டாதாம். காலம் அளவற்றதாயினும் அதன் அளவின்மைதானும், அளவுட்பட்டு வரையறை யுற்றதொரு பொருட் சம்பந்தங் கொண்டே துணியப்படு மாற்றாலும், காலம் வரையறைக் குரியதோர் குறியேயாதலாலும் வரைவுபாடு அனைத்தையும் கடந்து மாயாவரைப்பைத் தாண்டி; அப்பாலைக் கப்பால் விளங்கும் அருட்டரிசனமும் அதனாற் சித்திக்கும் ஆணவமல விடுதியும், மாயாவரைப்பி னுட்பட்டு மிகத்தாழ்ந்த படிக்கண் விளங்குவதாகிய கால தத்துவங்கொண்டு அளக்கப்படுவது கூடாதென்பது உண்மை நூலுணர்ச்சியுடையார்க்கு நன்குபுலப்படும் என்க. (இந்த உண்மைகள் கற்பனாசமயிகள் போல்வார்க்கு எடுத்துச் சொல்லத்தக்கனவன்றாயினும் அவர்களுடைய பசப்புரைகளால் நமது சமயிகள் மயங்காவண்ணம் இவற்றை ஒரு சிறிது இங்கே குறிப்பிட்டுக் காட்டினோம்.)

"இந்து சாதனம்."

தமிழ்க் கல்வி

(யாழ்ப்பாணம். ஸ்ரீ. சபாரத்தினமுதலியார் எழுதியது)

தமிழ்க்கல்வி என்பது தமிழ்ப் பாஷையைக் கற்கும் கல்வியைமாத்திரம் குறிப்பதல்ல. தமிழ்ச்சாதிக்குரிய ஆசாரங்களையும் அனுட்டானங்களையும் கற்கும் கல்வியும் தமிழ்க்கல்வி என்பதனுள் அடங்கும். ஒவ்வொருசாதிக்குமுரிய ஆசார அனுட்டானங்கள் அனைத்தும், அவ்வச்சாதிக்குரிய சுயபாஷையிற்றானே பூரணமாக அமைந்து விளங்கும். அவற்றை அந்தந்தப் பாஷையிற் கற்பதுபோலப் பிறபாஷைகளிற் கற்பது ஒருபோதுங்கூடாது. உண்மையை உற்றுநோக்குமிடத்து ஒரு பாஷைக்கும் அந்தப்பாஷைக்குரிய சாதி ஆசாரங்களுக்கும் மிகநெருங்கியசம்பந்தமுண்டு. பாஷையின் விருத்தியளவாகவே அந்தப்பாஷைக்குரியசனங்களின் சீர்த்திருத்தமும், குணவிசேடமும் ஆசாரவழக்கங்களும் அமைந்துவிளங்கும் "ஒருபாஷையைப் பரிசோதித்தால், அந்தப்பாஷையைப்பேசும் சனங்களுடைய நிலையைப்பற்றி நன்றாக அனுமித்துக் கொள்ளாம்" என்று ஒரு பண்டிதர் கூறியுள்ளார்.

எந்தெந்தச்சாதியும் திருந்துமிடத்துத் தத்தமது பாஷை வாயிலாகவே திருந்துதல் வேண்டும். பிறபாஷைவாயிலாக அவர்கள் திருந்துவது நீரில்வாழும் செந்து நிலத்தில் வாழ்ந்து திருந்துவது போலாகும். இது இந்த உலகத்திற் காணப்படுவதொரு இயற்கைத்தருமம். பாஷைகள் எல்லாம் பரிணாம முறைபற்றித் தோன்றி அமைவது போலவே, ஒவ்வொருசாதிக்குரிய ஆசாரங்களும் பரிணமித்து அமையும் இந்த இயற்கைமுறை அனைத்தும் அந்தந்தச் சாதியார்களுடைய பக்குவத்தளவாக நடைபெறும். இது ஆத்திகரும் நாத்திகருமாகிய இருதிறத்தாராலும் ஒப்பவே அங்கீகரிக்கப்பட்டுளதோருண்மை.

இனி ஆத்திகருடைய கொள்கைப்படி இந்த விஷயத்தை ஒருசிறிது நுணுகி ஆராயுமிடத்து, நாதத்திலிருந்து சத்தப் பிரபஞ்சம் தோன்றிற்றென்பதும்; சத்தப்பிரபஞ்சத்திலிருந்து அர்த்தப்பிரபஞ்சம் தோன்றிற்றென்பதும், ஆகவே சொற்பிரபஞ்சத்துக்கும் பொருட்பிரபஞ்சத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டென்பதும், கால அடைவிலே சொற்பிரபஞ்சம் காரணமாகப் பாஷைகள் தோன்றிப் பல்கிப் பெருகுமிடத்து, அந்தப் பாஷைக்குரிய சொற்களும், அவற்றின் அர்த்தங்களுக்கும், அந்தந்தச் சாதியாருடைய கருத்துவகைபற்றி அந்தச் சம்பந்தம் அமைந்து விளங்கும் என்பதும், இந்தச் சம்பந்த அளவுகொண்டே இவர்கள் விருத்தியுறுவர் என்பதும் இனிது புலப்படும்.

இந்த உண்மையை இன்னும் ஒருசிறிது ஊன்றி விசாரிக்குமிடத்து சொற்களெல்லாம் நாதத்திலிருந்து தோன்றிய மந்திரங்களே என்பதும், இந்தமந்திரங்கள் அவ்வச்சாதியாருடைய பக்குவத்திற்கேற்பப் பல விகற்பப்பட்ட வடிவங்கொள்ளும் என்பதும், இதுபற்றியே நாததத்துவத்திலிருந்து முற்படத்தோன்றிய சமஸ்கிருதம் தேவபாஷை எனப்படும் என்பதும், அதற்கடுத்த பாஷையாகிய தமிழ் மானுட பாஷை எனப்படும் என்பதும், இந்தத் தமிழ்பாஷைக்குரிய சைவர்களாகிய தமிழர் யந்திரவடிவாகிய தமது பாஷையில் எவ்வளவு விருத்தியுறுகின்றார்களோ அவ்வளவாகவே தமது சாதிவிருத்தியிலும் ஏற்ற முறுவார்கள் என்பதும், பாஷோற்பத்தியைச் சமய ஞானங்கொண்டு ஆராய்வார்க்கு இனிது புலப்படும். ஆனால் பௌதிகப்படி

அளவில் தமது காட்சி கட்டுண்டு கிடக்கும் பிராகிருதருக்கு இந்த உண்மை மிகநூதனமாகத் தோன்றுதலுங் கூடும். ஒருபாஷைக்கும் அந்தப் பாஷையைப் பேசும் சனங்களுடைய பக்குவத்துக்குமுள்ள சம்பந்தம் ஒன்று உண்டென்பது பிராகிருதர் தம்மாலும் ஒத்துக்கொள்ளத்தக்கது. இதுபற்றியே ஒருகருத்தை ஒருவனுக்கு அவனது சொந்தப் பாஷையில் விளக்குவதுபோலப் பிறபாஷையில் விளக்குவது கூடாதுகிடக்கின்றது. அல்லாமலும் ஒருபாஷையில் ஒருவாக்கியத்தால் உணர்த்தப்படும் பொருள், பின்னொருபாஷையில் அத்துணைப் பொருளாற்றலோடு உணர்த்தப்படுவது கூடாதபடி பெரிது காணப்படுவதும் இந்த நியாயம்பற்றியேயாம். ஆகவே சனங்களுடைய பக்குவத்துக்கும் அவர்களுடைய பாஷைக்கும் அந்தரங்கமாக அமைந்துவிளங்குவதோர் சம்பந்தமுண்டென்பதை நாம் உடம்படாதொழிவது கூடாது. பாஷையோடுளதாய சம்பந்தம்போலவே, ஒவ்வொரு சாதிச்சனங்களுக்கும் அவர்களுடைய ஆசாரவழக்கங்களுக்கும் ஒருசம்பந்தமுண்டு. அதாவது அந்தந்தச் சாதியாருடைய சித்சொரூப விருத்திக்குத் தக்கதாகஅவர்களுடைய பாஷையும் ஆசாரங்களும் பரிணமித்தமையும் என்றபடியாம்.

ஆகவே தமிழ்ச்சாகியத்தார்களாகிய நாங்கள் விருத்தி யுறுதல் வேண்டும் என்னும் விருப்பம் எங்களிடத்தே உண்மையாக இருக்குமானால், நாங்கள் எங்கள் சொந்தப்பாஷை வாயிலாகவும் எங்கள்சொந்த ஆசார அனுஷ்டானங்கள் வாயிலாகவுமே அங்ஙனம் விருத்தியுறுவது கூடும். தாவரஉணவுக்குரிய யானை தாவரத்தை உண்டேவிருத்தியுறுதல்வேண்டும், அது மாமிசத்தை யுண்டு விருத்தியுறமாட்டாது.

இந்த உண்மையை ஒரு சிறிதாவது ஆலோசியாமல் இந்தக் காலத்துள்ள நம்மவர்கள் அந்நிய பாஷையாகிய ஆங்கில பாஷை வாயிலாகவும், அந்நிய சாதியாசாரமாகிய ஆங்கில ஆசாரங்கள் வாயிலாகவும் நாங்கள் விருத்தி யுறுதல் வேண்டும் என்று பெரிதும் கோஷிக்கின்றார்கள். இவர்கள் எங்கள் சொந்தப் பாஷையையும், எங்கள் சொந்தச் சாதியாசாரங்களையும் அழித்து விடும்படி துணிந்து நிற்கின்றார்களன்றி, எங்கள் பாஷையையாவது எங்கள் சாதியாசாரங்களையாவது விருத்தி செய்யச் சிறிதும் சிந்திக்கின்றாரில்லை. இவர்கள் எங்கள் சாதிக்குரிய பொருள்களாகிய பாஷையிலும் ஆசாரங்களிலும் அபிமானமில்லாத பொழுது, எங்கள் சாதியை விருத்தி செய்தல் வேண்டும் என்றும், எங்கள் சாதியை முன்னுக்குக் கொண்டு வருதல் வேண்டும் என்றும் முழங்கும் முழக்கங்கள் எல்லாம் வெற்றுரை மாத்திரையே யாகும். எங்கள் சாதியைஅழித்து விட்ட பின்னர், இவர்கள் முன்னுக்குக் கொண்டுவருவது தான் யாதாகும்? சென்றுபோன நூறுவருஷங்களுக்குள்ளே எங்கள் சாதிக்குள் நிகழ்ந்துள்ளமாற்றங்களை நாம்நோக்குமிடத்து, இந்த விகிதப்படி எங்கள்சாதி மாற்றம்அடையுமாயின் இன்னும் ஐஞ்ஞூறு வருஷங்களுக்குள் எங்கள் சாதி முற்றாய் அழிந்துவிடும் என்று நாம்துணிந்துசொல்லலாம். எங்களுடைய தமிழ்ப்பாஷை அதிமாதுரியத் தீந்தமிழ் எனப் பிரஸ்தாபம் வாய்ந்துளதாயினும், அதனைப் பொருட்படுத்துவார் ஒருவரையும் காணோம். அந்தப் பாஷையை எவ்வளவு விரைவாக மறந்துவிடுவது கூடுமோ அவ்வளவு விரைவாக நாம் நாகரிகம்படைத்து விடுவேம் என்பது நம்மவருட் பலருடைய கருத்தாகக் கிடக்கின்றது. எங்கள் பெண்களுக்குமே ஆங்கிலத்தில் விருப்பந்தோன்றி விட்டது. பின்னை எங்கள் சாதி முன்னுக்கு வருவது தான் எப்படியோ? விவேகிகளே இதனைச் சிறிது சீர் தூக்குங்கள்.

சிறுதேவதைகட்கு உயிர்ப்பலி இடலாமா?

(ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்களால் எழுதப்பட்டது)

"எவ்வுயிரும் என் உயிர் போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்வாய் பராபரமே."—தாயுமானசுவாமி.

கல்வியறிவும் நல்லோர் சேர்க்கையும் இரக்கமான நெஞ்சமும் இல்லாமையால், நிரம்பவுந் தாழ்ந்த நிலைமையிலுள்ள மனிதர்கள் தாம் தாம் தமது குலதெய்வமாகக் கும்பிட்டுவருங் காளி, பிடாரி, மாரி, குரங்குணி, எசக்கி, கறுப்பண்ணன், மதுரைவீரன் முதலான சிறுதேவதைகளுக்கு அளவிறந்த கோழி ஆடு எருமை முதலான குற்றமற்றபிராணிகளை வெட்டிப்பலி இடுகின்றார்கள். தாழ்ந்த நிலைமையில் உள்ள ஏராளமானமனிதர்கள் இங்ஙனஞ்செய்து வருதலைப்பார்த்துப், "பன்றியோடு கூடியகன்றும்" செயல்மாறுபட்டபான்மைபோற்சைவவேளாளர்சிலரும் பார்ப்பனர் சிலரும் இச்சிறுதேவதைகளை வணங்கப்புகுந்து இவர்களும் மேற்சொன்ன ஏழைப்பிராணிகளின் கழுத்தை அறுத்து அவற்றைப் பலியூட்டுகின்றார்களாம் உயிர்க்கொலையாகிய புலைத்தொழிலைச் செய்யும் தாழ்ந்த வகுப்பாரைப்போலவே உயர்ந்த வகுப்பாரும் செய்யத் தலைப்பட்டால், உயர்ந்தோர் இவர் தாழ்ந்தோர் இவர் என்று எங்ஙனம் பகுத்துச் சொல்லக் கூடும்? உயர்ந்தோரும் தாழ்ந்தோராய் மாற உலகம் எங்கும் பாவமாகிய இருள் அன்றோ பரவும்! மனிதரிற் பலர் தாழ்ந்தோர் ஆனதும் சிலர் உயர்ந்தோர் ஆனதும் அவரவர் குணத்தினாலும் செய்கையினாலும் அறிவினாலுமே என்பது எல்லார்க்கும் எல்லா நூலுக்கும் உடன் பாடாம். தெய்வத் தன்மை வாய்ந்த திருவள்ளுவரும் இதனாலன்றோ "பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்" என்றும்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையால்" என்றும்,

"மேலிருந்தும் மேல் அல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழ்அல்லார் கீழ்அல்லவர்" என்றும் அருளிச்செய்தனர்?

இழிகுணங்களும் இழிந்த செய்கைகளும் உலகிற் கணக்கற்றனவாய்ப் பெருகி இருப்பினும் இவை எல்லாவற்றுள்ளும் மிகக்கொடியவை இரக்கம் அற்ற வன்னெஞ்சமும் கொலைத் தொழிலுமே யாகும். உயிர்களைக் கொலைசெய்தலும் அவற்றின் ஊனைத் தின்னலுமாகிய புலைத்தொழில் எல்லாப் பாவத்தொழிலினுங் கடைப்பட்டதென்னும் உண்மை.

"நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கங்கடை" என்னும் தமிழ்வேதமான திருக்குறளினாலும்,

"உயிர்களைக் கொல்லச் சொன்னவன், கொன்றவன், ஊனை அறுக்கிறவன், அதனை விற்கிறவன், அதனை வாங்குகிறவன், அதனைச்சமை

க்கிறவன், பரிமாறுகிறவன், தின்கிறவன் என்னும் இவர்கள் அனைவரும் கொலைகாரர்களென்று சொல்லப் படுகிருர்கள்'' என்னும் வடமொழியில் மனுஸ்மிருதியினுலும் தெளியப்படும்.

இவ்வளவு இழிந்ததாக இருத்தலினுலேதான் உயிர்க்கொலை செய்பவர்களும் அதற்குக் காரணமாய் இருப்பவர்களும் இழிகுலத் தவரென்றும், அப்புலைத் தொழிலை விட்டுச் சைவவொழுக்கம் பூண்டவர்கள் உயர்குலத்தவ ரென்றும் வகுக்கப் படுவராயினர். கொலைப்பாவக் கடலைத் தாண்டிப் புண்ணியக்கரை ஏறின மேற்குலத்தவர்கள் கொல்லா விரதத்தின் மேன்மையை எடுத்துச் சொல்லுதலாகிய படகைக் கொண்டு சென்று அப்பாவக்கடலிற்கிடந்து தத்தளிக்கும் மற்றைத்தாழ்ந்த சாதியரை எடுத்து உயர்த்திக்கரை சேர்த்தலே புகழும் புண்ணியமும் ஆகும். கொலையையும் புலால் தின்னுதலையும் ஒருவன் அறவே ஒழித்துவிடுவாளுயின், அதனுல் எத்தனையோ ஆடுமாடுகள் கோழி குருவிகள் மான்கள் மீன்கள் உயிர்பிழைக்குமல்லமவா? இங்ஙனமே ஒவ்வொருவராய்ப் புலைத் தொழிலைப் பலரும் நீக்க நீக்க எண்ணிறந்த உயிர்களும் தத்தம் உடம்புகளில் நிலைபெற்று நின்று இனிது உயிர்வாழும் அல்லவோ? நம்முடைய உயிர்வாழ்க்கை நமக்கு இனிதாய் இருத்தல் போலவே எல்லாச்சீவர்களுக்கும் தத்தம் உயிர்வாழ்க்கை இனிப்பாயிருக்கிறது எல்லாத் தருமங்களினும் மேலதாய்விளங்கும் கொல்லாவிரதத்தைக் கைப்பற்றி யொழுகும் புண்ணியம் வாய்ந்து அதனைப் பிறர்க்கு அறிவுறுத்தும் நிலையுள்ள சைவரும் பார்ப்பனரும் தமது உயர்வை மறந்து, தாமும் ஆடு கோழி மாடு வெட்டிப் பலியிடும் பாவப்படுகுழியில் வீழ்ந்தால் இனி உலகத்தில் நல்வரம் நிலைக்குமோ சொல்லுங்கள்! கொல்லா அறத்திற்கு ஒரு பாதுகாவலாய் அமைந்த மேற்குலத்தவரே அதனை அழித்தால் அதனிலும் பெரும் பாவம் வேறுண்டோ? "வேலியே பயிரைத்தின்ருல் விளைவதெப்படி?"

இனி, இச்சிற்றுயிர்களை நம்பொருட்டுக் கொல்லாமல் சிறுதேவதைகளின் பொருட்டுக் கொல்விக்கின்ரே மாதலால் பாவமாக மாட்டாதெனின், அது பொருந்தாது. பிடாரி, குரங்குணி, எசக்கி, மதுரைவீரன் முதலானவை யாவை? தாம் உயிரோடிருந்த காலங்களிற் பலவகையான கொடுஞ்செயல்களைச் செய்து அவற்றிற்காக அரசனுலும் பிறராலுந் தண்டிக்கப்பட்டுப் பருவம் முதிராமுன்னரே இறந்தொழிந்த மனிதரின் பேய்வடிவங்களேயாகும்; இவை தாம்செய்த பாவத்தால் இந்த நிலவுடம்பை விட்டுப் பேய் உடம்பிற் புகுந்து இருள் உலகத்தில் அலைந்து திரிகின்றன. தாம் செய்த பாவம், பேய் உடம்பில் தாம் அனுபவிக்குங் கொடிய நரகதண்டனையால் தீர்ந்தவுடன், முழுமுதற் கடவுளின் திருவருளாணையால் மறுபடியும் அவை மனித உடம்பிற் பிறக்கும். அறிவில்லா மாந்தர்கள் வணங்கிவரும் சில்லறைத் தேவதைகளிற் பல இப்

போது மனிதராய்ப் பிறந்திருக்குமாதலால், அவைகள் இவர்களாற் செய்யப்படும் பூசையை ஏற்றுக்கொள்ள மாட்டாதனவாய் இருக்கின்றன. 'இப்போது இத்தேவதையின் ஆட்டம் இங்கே ஓய்ந்து போயிற்று' என்று அவற்றை வணங்குவோர் சிலகாற் சொல்லுஞ் சொற்களே இதற்குச் சான்றாம். மனிதராய் இருந்தபோது கொலை களவு காமங் கட்குடி முதலான பாவங்களைச் செய்து சடுதியில் இறந்து கடவுளின் ஆணையாற் பேய்வடிவங்களாய் அலைந்து திரியும் அவ் ஆவிகளை வணங்குதலே குற்றமாகும். ஏனென்றாற் கொலைகாரர்களோடு பழக்கஞ் செய்பவன் அக்கொலைஞனாலும், களவரோடு நேசஞ்செய்பவன் அக்கள்வர் கூட்டத்தாலும், வேசிக்கள்வரோடு சேர்க்கையுள்ளவன் அவ்வேசிக்கள்வராலும், கட்குடியரோடு சேர்ந்தவன் அக்கட்குடியராலும் சூழப்பட்டுப் பெரிதுந் துன்புறுதல்போல, இத்தீயபேய்வடிவங்களைத் தெய்வங்களாக வணங்குவோர் இவ் ஆவேசங்களால் எந்நேரமுஞ் சூழப்பட்டு அவற்றால் மிகவும் துன்புறுத்தப் படுவார்கள். கொலை முதலான பாவங்களைச் செய்வோர் நல்லோரை அணுகாமல் அஞ்சி விலகிப்போதல்போல, எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளானசிவத்தை வழிபடும் நல்லோரைக் கண்டு இக்கொடும் பேய்கள் அஞ்சி விலகிஓடும். இவ்வியல்புகளெல்லாம் யாம் எழுதிய "மரணத்தின்பின் மனிதர்நிலை" என்னும் நூலில் விரிவாக எடுத்துக்காட்டியிருக்கின்றேம்; அவையெல்லாம் இங்குவிரிப்பதற்கு இடம் இல்லாமையால் அதிற் கண்டு கொள்க. நம்போன்ற சிற்றுயிர்களிற்சேர்ந்த இப்பேய்களையும் மற்றெல்லா உயிர்களையும் ஆக்கவும் அழிக்கவும் வல்லது சிவம் ஒன்றேயாம். பாவங்களைச் செய்து பிறப்பிலும் இறப்பிலும் கிடந்து சுழன்று வருந்தும் பேய்கள் எதனையும் ஆக்கவேனும் அழிக்க வேனும் சிறிதும் வல்லன வல்ல. இத்தகைய பேய்களைத் தெய்வங்களாக வணங்குவது எதுபோலிருக்கின்றதென்றால், ஓர் அரசன் கீழ் இருந்து வாழும் குடிகள் தம் அரசனை வணங்காமல் அவ்வரசனாற் தண்டிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருக்குங் குற்றவாளிகளை அவ்வரசனாகப்பாவித்து வணங்குதலையே ஒத்திருக்கின்றது. ஆக்கவும் அழிக்கவும் வல்லனான ஈசனாற் படைக்கப்பட்டு அவ்வீசனுக்குப் பிள்ளைகளாய் உள்ள எல்லா உயிர்களுள்ளும், மனிதரான உயிர்கள் மற்ற ஏழை உயிர்களான ஆடு கோழி மாடுபன்றி முதலியவற்றை வெட்டிப் பலியிடுவது எதனை ஒத்திருக்கின்றதென்றால், ஓர் அரசனுக்குரிய குடிகளிற் சிலர் தம்மினும் வலிகுறைந்த மற்றவர் சிலருடைய கைப்பொருள்களைப் பறித்துக் கொண்டுபோய் அக்குற்றவாளிகளுக்குக் கொடுத்து அவர்களை அரசாரகப் பாவித்து வணங்கினதையே ஒத்திருக்கின்றது. தன்னால் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளை இங்ஙனம் வணங்கியவர் இன்னார் என்று தெரிந்தமாத்திரத்தாலே அரசன் அவர்களைக் கடுந்தண்டனைக்கு உள்ளாக்குவதுபோல, ஈசனும் தன்னால் தண்டிக்கப்பட்ட பேய்களுக்குத் தான் படைத்த உயிர்களைக் கொன்று பலியூட்டும் அறிவில்லா மாந்தரை யமதூதரால் மிகவும் கடு

மையாகத் தண்டிப்பான் என்பது திண்ணம். சிறு தேவதைகளுக்கு உயிர்களைக் கொன்று பலியிடுவோர் இம்மையிலே தம் பிள்ளைகளைப் பறி கொடுத்து வருந்துவர். தாமும் தம்மக்களும் நச்சுக்காய்ச்சல், அம்மை, குட்டநோய், கக்கறகளிச்சல் பொருட்கேடு முதலான துன்பங்களுக்கு ஆளாகிப் பதை பதைப்பர்; மறுமையிலும்.

"கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லிடி காரர் வரிகயிற்றால் கட்டிச்
செல்லிடு நீரென்று தீவாய் நரகிடை
நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே." என்றும்,

கொன்றிலாரைக் கொலச்சொல்லிக் கூறினார்
தின்றிலாரைத் தினச்சொல்லித் தெண்டித்தார்
பன்றியாய்ப் படியிற்பிறந் தேழ்நரகு
ஒன்றுவார் அரன் ஆணை இதுண்மையே. "என்றும்,

திருமூல முனிவர் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம் யமதூதரால் அனல் நிறைந்த நரகத்தினும் மற்ற எழுவகை நரகங்களினும் அழுத்தப்பட்டு மிகவும் நொந்து, திரும்பவும் இந்நிலவுலகத்திற் பிறக்குங்கால் பன்றியாய்ப் பிறந்து நைவார்கள். எல்லாவுயிர்களையும் படைக்கும் ஈசன் ஒருவனே அவற்றின் பருவம் அறிந்து அவற்றை அழித்தற்கும் உரியவன் அன்றி, மற்றமனிதர்கள் தம்போன்ற உயிர்களான பேய் வடிவங்களின் பொருட்டு வாய் அற்ற ஏழை உயிர்களின் கழுத்தை வெட்டிப் பலியூட்டுதல் மன்னிக்கப்படாத பெருங்குற்றமும் பாவமுமாய் முடியும் என்று அறிந்து கொள்ளுங்கள். முழுமுதற் பொருளான சிவ பெருமானை நேரே வணங்கும் புண்ணியமும் நல்லறிவுமில்லாதவர்கள் காளி, கூளி, எசக்கி, கறுப்பண்ணன், மதுரைவீரன் முதலான சில்லரை வடிவங்களை வணங்கினாலும் அவற்றிற்கு ஆடு கோழி மாடு முதலிய உயிர்களைப் பலியிடாமல் வணங்குதலே செயல்வேண்டும்; அங்ஙனமின்றி அவற்றைப்பலியிட்டால், அவ்வுயிர்ப்பலி பூசையை அவை ஏற்றுக்கொள்ளமாட்டா; ஏனெனில் நிலவுலகத்தில் தாம்செய்த பாவங்களுக்காக ஈசனால் தண்டிக்கப்பட்டு முன்னமே அலறித்திரியும் அப்பேய்கள் மனிதர் அறியாமையாற் செய்யும் உயிர்ப்பலியை ஏற்றுக்கொள்ளுமாயின் ஈசன் படைத்த உயிர்களை மனிதர் கொலைசெய்த பாவத்திற்குக் காரணமாய் இருந்தது பற்றி அப்பேய்களை நம்பெருமான் இன்னும் கடுமையாகத் தண்டிப்பான். ஆனதுபற்றி, மனிதர் உயிர்ப்பலி இடுங் காலங்களில் எல்லாம் அப்பேய்கள் ஈசதண்டனைக்கு மிக நடு நடுங்கி அவற்றை ஏற்றுக்கொள்ளாமல் அப்பால் விலகி ஓடிப் போகின்றன. அதனால் அப்பாவத்திற்கு அவைகள் ஆளாவதில்லை; அவற்றைச்செய்யும் மனிதர்களே அப்பாவத்திற்கு முற்றும் உரியவராகின்றார்கள். அப்பேய்கள் மனிதர்மேல் ஏறிநின்று ஆடிய சிலசமயங்களில் யாம் அவற்றின் நேரே இருந்து கேட்டபோது அவை தமக்கு உயிர்ப் பலி ஆகாதென்றே கூறின. பொய்யாக ஆவேசம் ஆடும் பொல்லாமனிதர்களே உயிர்ப்பலி யிடவேண்டும் என்று சொல்லிப் பழிக்கும் பாவத்திற்கும் ஆளாகி இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் சிவபெருமானால் தண்டிக்கப்படுகிறார்கள். ஆதலால் தேவராய்ப்பிறந்த மேன்மக்களே, சிறுதேவதை வணக்கத்தையும் உயிர்ப்பலியையும் அறவே விடுத்து, மற்றுக் கீழ்மக்களும் அவற்றை விடும்படி செய்வித்துப் புகழையும் புண்ணியத்தையும வளர்த்து எல்லாச் செல்வங்களோடும் பொலிந்து நம் முழு முதற் சிவத்தின் திருவருளுக்கு உரியவராய் வாழ்மின்கள்!

வயலைக் கொடி

சங்கமருவிய தமிழிலக்கியங்களிலே அங்கங்கே வயலைக் கொடியின் செய்தி வரக்காண்கின்றோமாகையால், அது நமது தமிழ் நாட்டுப் பழமையான பொருள்களில் ஒன்றென்பது நன்கு விளங்குகின்றது. ஆனபடியால், அதைப்பற்றிச் சிறிது ஆராய்வோமாக.

"அயல்புறந்தந்த புனிற்றுவளர் பைங்காய்
வயலைச் செங்கொடி கள்வன் அறுக்கும்
கழனி ஊரன்" ஐங்குறு 25-என வருதலால் அது மருத நிலக்கருப் பொருளென்பதும், நீர் நிரம்பி நிலச்செழுமையுடைய வயல்களிலே பயிராவதென்பதும் தெரிகின்றது. மேலும், அது வயலிலே விளைகின்ற காரணத்தினாலே தான் வயலையென்னும்பெயர் வந்திருக்கலாமென்றும் தெரிகின்றது. இக்காலத்திலே இப்பெயரை வசலையெனவும் பசலையெனவும் வழங்குகின்றார்கள். கொடி வயலையேயன்றிக் கொத்து வயலை என்பதும் ஒன்றுண்டு. அக்கொத்து வயலை தரைமட்டத்திலிருந்து எட்டொன்பது அங்குலத்துக்கு மேலே எழும்பி வளராது. ஆனால், பக்கங்களிலே மிகவும் கிளைத்துப் புதலாகத் தழைக்கும். கொடி வயலையிலும் கொத்து வயலையிலும் வெண்மை செம்மை இருநிறமும் இருக்கின்றது.

கொடியும் காம்பும் வெள்ளை அல்லது சிவப்பாக இருக்க இலைநீர் நிரம்பித் தளமாகவும் பளபளப்பாகவும் பசுமையாகவும் இருக்கும்; இதனிடையே கணுக்கள் தோறும் மிளகுக் கொத்துப் போலப் பசியகாய்கள் கொத்துக் கொத்தாகத் தொங்கும். காய் முற்றிப் பழுத்தபோது, கருமையாக மாறிமிக அழகாகத் தோன்றும். இலையைக் கசக்கினால், நீரும் வழுவழுப்பும் நிறைந்திருக்கக் காணலாம், இதன் வளர்ச்சிக்கு நீரும் நிழலும் குறைவின்றி வேண்டும்; வெயிலும் வெப்பமும் பட்டால் வாடி வதங்கிப் போகும்.

செழித்து வளர்ந்து செம்மையாகப் படர்ந்த வயலைப் பந்தர் பார்வைக்கு மிகவும் அழகிய தோற்றமுடையது. ஆகையாற்றான், அதை முற்காலத்துப் பெண்கள் மனைப்புறத்திலே நட்டுப் பயிராக்கி வந்தார்கள். அவ்வாறு பயிராக்குவது அவர்களுக்கு ஒரு தொழில் அன்று; மற்று, அக்காலத்திலே அவர்கள் பயின்று வந்த பலவகை ஆட்டங்களிலே ஒன்றும் - இதனை ஐங்குறு நூற்றிலே வரும் "மனை நடுவயலை"-(11) என்னும் தொடரானும், நற்றிணையிலே வரும் மனைமருட்சிச் செய்யுள்களானும் (199,305) தெரிந்து கொள்ளலாம்.

1. "இல்எழு வயலை ஈற்று தின்றெனப்
பந்துநிலத் தெறிந்து பாவை நீக்கி
அவ்வயி றலைத்தஎன் செய்வினைக் குறுமகள்
மான் அமர்ப்பன்ன மையல் நோக்கமொடு
யானும் தாயும் மடுப்பத் தேனொடு
தீம்பால் உண்ணாள்; வீங்குவனள் விம்மி;
நெருநலும் அனையள் மன்னே; இன்றே
மையணற் காளை பொய்புகல் ஆக
அருஞ்சுரம் இறந்தனள்; என்பதன்
முருந்தேர் வெண்பல் முகிழ்நகை திறந்தே."

இதன் கருத்து தலைமகன் தலைமகளை வைகிருளிலே அழைத்துக்கொண்டு தன் ஊருக்குப் போனதைச் செவிலியால் அறிந்த நற்றாய் 'அஃது அறநெறியே' என நினைந்தும் அவளது இளமைத் தன்மைக்கு உளமெலிந்து இரங்குகின்றாள்; 'என்னொரு மகள் நேற்று பந்தும் பாவையும் ஆடிக்கொண்டிருந்தபோது, தான் வளர்த்து வந்த வயலைக்கொடியைப் பசு மேய்ந்துகிடப்பதைப் பார்த்து, அவற்றை நிலத்தே எறிந்து தன் அழகிய வயிற்றில் அடித்துக்கொண்டு கண்பிசைந்து அழுதாள்; யானும் செவிலியும் தேனும் பாலும் கலந்து ஊட்டவும் உண்ணாது விம்மினாள்; நேற்று அத்தன்மையளா இருந்தவள், இன்று தன் காதலன் சொன்ன பொய்யை நம்பி அவனோடு அருஞ்சுரம் சென்றனள். இங்ஙனம் சென்றாளென்பதை எவ்வாறு ஆற்றுவேன்' என்பதாம்.

2. "வரிஅணி பந்தும் வாடிய வயலையும்
மயில்அடி அன்ன மாக்குரல் நொச்சியும்
கடியுடை வியன்நகர் காண்வரத் தோன்றத்
தமியே கண்ட தண்டலையும் தெறுவர
நோயா கின்றே; மகளை! நின் தோழி
எரிசினம் தணிந்த இலையில் அஞ்சினை
வரிப்புறப் புறவின் புலம்புகொள் தெள்விளி
உருப்பவிர் அமையத் தமர்ப்பனள் நோக்கி
இலங்கிலை வென்வேல் விடலையை
விலங்குமலை ஆரிடை நலியுங்கொல் எனவே."

இதன் கருத்து=தலைமகன் தலைமகளை இரவில் உடன் கொண்டு சென்றனனென்று செவிலியால் அறிந்த நற்றாய் 'அஃது அற நெறியே' என நினைந்தும் அவள் பிரிவு பொறாது, மனையின் கண் இருந்து மருள்வாளாய்த் தோழியை நெருங்கி,

"மகளே! நினது தோழி ஆடிய பந்தும், அவள் ஓம்பிவளர்த்த வயலைக் கொடியும் விளையாடிய நொச்சியும், அவள் இல்லாது தனியே கண்ட சோலையும் என்னை வருத்தாநிற்ப அதனோடு நில்லாமே காட்டின் கண்ணே நண்பகலில் புறவின் குரலைக் கேட்டு அமர்த்த நோக்கத்தால் அவ்விடலை வருந்தவும் செய்யுமோ என்று என் உள்ளம் துயரம் எய்துவதே!" என்பதாம்'

இனி, இவ்வயலைக் கொடியைப் பண்டைப் புலவர்கள் பல பொருளோடு உவமை கூறிப் போந்தமையால், இது யாவரும் நன்றாகத் தெரிந்த எளிய தொன்றாயினும், உவமை கூறத்தக்க உயர்வும் அழகும் உடைய தென்பது போதருகின்றது கொடிகள் பின்னி நின்ற பிணையலோடு காதலரிருவர் கழுமிநின்ற தோற்றத்தை ஓரம்போகியார் மிக அழகாக உரைக்கின்றார்.

அது வருமாறு:—

"வயலைச் செங்கொடி பிணையல் தைஇச்
செவ்விரல் சிவந்த சேயரி மழைக்கட்
செவ்வாய்க் குறுமகள் இனைய
வெவ்வாய் முன்னின்று மகிழ்ந!நின் தேரே." 52.

அன்றி, மதுரை வேளாசான்,

'வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்'—புறம் 305.

என, தன் பாரத்தைச் சுமந்து நெடுந்தூரம் ஓடியிளைத்த ஒரு குதிரை முதுகின் வாட்டமுற்ற தோற்றத்தை வயலைக்கொடியின் வாட்டத்தோடும் உவமித்துரைக்கும் அருமை நாமெல்லோரும் பாராட்டத்தக்கது ஒன்றே யாம். இது நிற்க, இக்காலத்தில், வயலை இலைக் கறியாக உண்ணப்படுகின்றது. பயற்றம் பருப்பும் பச்சை மிளகாயும் சேர்த்துக் கூட்டாகச் சமைத்து நெய்யோடு உண்டால், பெருஞ்சுவை தருகின்றது, புளிங்கறி முதலாக வேறு வகை சமைத்தலும் உண்டு. இக்கீரை மலச்சிக்கலை மாற்றும். உடம்பின் அழலையைப் போக்கி குளிர்ச்சியைக் கொடுத்து, தழைப்பிக்கும். வெட்டை நோய்க்கும் மலபந்த நோய்க்கும் இதை அடிக்கடி உண்டுவந்தால், பெரிதும் பயன்படுகின்றது.

மயிலை கிழான்.

பிரதாபன்

அல்லது

நட்புமுறை பிறழ்ந்த நண்பன்

(71-வது பக்கத்தொடர்ச்சி)

கிழவி:— அவர் அங்கு வரமாட்டார். இது நிச்சயம் இது சத்தியம்.

லலிதை:— ஏன், ஏன்?

கிழவி:— காரண மொன்றுண்டு, அதை வெளிப்படுத்த எனக் கிஷ்ட மில்லை.

லலிதை:— பாட்டி! அக்காரணம் என்ன வென்று எங்களுக்கெடுத்துச் சொல்.

கிழவி:—அவர்இங்கே ஹீராபாய் என்னும் காரிகைமீது காதலுற்றிருக்கிறார். அம்மாதோ வெனில் வீரசேன வீரருக்குத் தன்னுயிரையுங் கொடுக்கத்தயாராய் இருக்கிறாள். உமது பிரதாப வீரரை அவள் ஏரெடுத்தும் பார்ப்பதில்லை, ஏனென்றுங் கேட்பதில்லை. அவளை எவ்விதத் தாயினும் அடையவேண்டு மென்னும் எண்ணம் அவருக்குப் பூர்த்தியாக வுண்டு.

இதைக் கேட்டதும் லலிதையின் மனமுடைந்தது. "இஃதோ என்கதி! ஈசா, ஈசா!—பிரதாப வீரரே, வீரசிங்கமே! எனக்களித்த வாக்கையும் மறந்தீரோ" என்று தன்மனத்திலுன்னி ஏக்கமடைந்தாள். சிறிது நேரத்திற்கு முன் அவளுக்கிருந்த மனமகிழ்ச்சி யெல்லாம் அளவிடக்கூடாத துக்கமாக மாறிற்று. என்ன செய்வாள் பாவம்!

கதாவாசகரே! உண்மைக் காதலிக்குறும் துயரத்தைப் பாரும். அத்துயரங்கட்கெல்லாம் ஈடுபட்டவளாய் மனவுறுதி நீங்கப் பெறாதவளே உத்தமியாவள். அத்தகையாள் யாவரும் கைதொழு தேத்தத் தகுந்தவள்; இப்பூவுலகில் பெரிய பெருமணி யாவள்.

"மண்மடந்தையர் தம்முளும் வாசவன் உறையும்
விண்மடந்தையர் தம்முளும் நிகரிலாவிறல் வேல்
கண்மடந்தை அந்தண்குழல் அருந்ததிக் கற்பின்
எண்மடங்கு கற்புடையள் இந்திரையினும் எழிலாள்" என்னும் பாடலைப் பாடினவர் லலிதையைக் கண்டு அவள் குணாதிசயங்களை அறிந்துள்ளார் போலும்.

சிறிது நேரஞ்சென்றது. லலிதாங்கியானவள் தன் மனோ வியாகுலத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் அக்கிழவியை நோக்கி, "பாட்டி! அவ்விஷயம் நீ எவ்விதம் அறிவாய்?" என்று அடைத்துக் கொண்டுவரும் துக்கத்தை அடக்கிய வண்ணம் வினவினாள். அவள் வதனம் சிவந்தது.

கிழவியின் இரு கண்களும் சிறிது மிங்கியிருந்தன வாதலால் அவள் அம்மங்கையின்முகவேறுபாட்டைத் தெரிந்துகொள்ளவில்லை.

"ஐயா! நான் ஹீராபாய் என்பாளுக்கு மாலைதோறும் அவள் கூந்தலிற் சூடும் பொருட்டு நறுமண மலர்களை மாலையாகத் தொடுத்து அவளுக்கு விற்பதுவழக்கம். அதனால் அவளுக்கும் எனக்கும் சிநேகமுண்டு. அதை அறிந்த பிரதாபவீரர் என்னையடுத்துத்தமது எண்ணத்தைநிறைவேற்ற வேண்டிக் கொண்டார். அதற்கு நான் சம்மதித்து அவருடைய கருத்தை அவளுக்கு வெளியிட்டேன். அதனால் அவள் என்மீது நாய்போல்சீறி வீழ்ந்தாள். 'அவ்வித அனுவலில் நீ இனி தலையிட்டுக்கொண்டால் எனக்குப் புஷ்பம் கொண்டுவர வேண்டியதில்லை" என்று ஆக்ஞாபித்தாள். அது முதற்கொண்டு அவர் விஷயத்தைப் பற்றி நான் அவளுடன் பேசுவதில்லை.

லலிதை:— சரி சரி! அவர் அப்படியானால் காவிரிப்பூம் பட்டினத்திற்கு வரமாட்டார் போலிருக்கிறது. பாவம், அவரைத் தன்னுயிருக்கு மேலாகப்பாவித்திருக்கும் அந்நங்கை பிரிவாற்றாமையால் இறக்கவேண்டியது தான்.

கிழவி:— ஆண்பிள்ளைகள் மனது கல்லாச்சுதே அவர்களை நம்பின பெண்கள் நடுத்தெருவில் நிற்கவேண்டியது தான். ஐயா, நீர் இவ்விஷயங்களைப்பற்றி அவரைக் கேட்கவேண்டாம். அதனால் என்மீது அவருக்கு வருத்த முண்டாகும்.

லலிதை:— நான் கேட்பேனா பாட்டீ! அவ்வளவு புத்தியில்லையா எனக்கு—எதற்கும் நான் போய் அவரைக் காண்கிறேன்.

கிழவி:— அவ்விதமே செய்யும்.

உடனே லலிதையும் ராமமூர்த்தியும் அவ்விடத்தை விட்டகன்று சித்தூர் துர்க்கத்தை அடைந்து பிரதாபனைக் கண்டு பேசினர். அவனைக் கண்டதும் அவளுக்கு அளவிலா ஆனந்த முண்டாயிற்று. சிலநிமிஷங்களுக்குள் அம்மகிழ்ச்சி அவளை விட்டகன்றிட அவள் மனத்தில் மிகுந்த துக்கம் புகுந்தது; அதை வெளிக்குக் காட்டவில்லை.

பிரதாபன்:— ஐயா, லலிதை எவ்விதமிருக்கிறாள். அவள் தந்தை சௌக்கியந் தானே.

லலிதை:— அனைவரும் சுகம். ஆனால், லலிதை சீக்கிரம் இறந்து விடுவாள் போலிருக்கிறது. அவள் உம்மைப்பற்றி நினைக்காத நிமிஷமில்லை. பிரதாபவீரனென்னும் வாக்கியமும் பெருமூச்செறியுந் தொழிலும் அவளை விட்டு நீங்கவில்லை. அது காரணம் பற்றி நீங்கள் சீக்கிரம் அவ்விடம் வருவது உசிதமென நினைக்கிறேன்.

பிரதாபன்:— இப்போது இந்நாட்டில் மொகலாயர் படையெடுத்து வரும் பயம் அதிகமாயிருக்கிறது நானும் வீரசேனனும் எம்மாலி

யன்ற வளவில் அம்மொகலாயரைத் துரத்தி இந்நாட்டதிபதி பிரதாப சிங்கருக்கு நற்கீர்த்தி யுண்டாக்க முயற்சி செய்கிறோம்.

"மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிக பகைதிறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந் தீர்த்தறங் காப்பானல்லனோ"—

ஆதலால் எங்கள் நிர்ணயம் ஈடேறும் வரையில் இந்நாட்டை விட்டகலோம்.

லலிதை:— "இதனிலும் பெண்ணொருத்தியின் உயிர்மிக்க தன்றோ!" என்றாள். அவளது இடது கண்ணிலிருந்து துக்கமிகுதியால் நீர்த்துளி யொன்று கீழே விழுந்தது. யாதோ ஆழ்ந்த யோசனையிலிருந்த பிரதாபன் அதைக் கவனித்தவனல்லன். அதை அவள் துடைத்துக் கொண்டு ஏறிட்டு அவன் முகத்தைப் பார்த்தாள். "ஆடவர் முகத்திலிருந்து அவர்களுடைய உள்ளத்தை அறிவது அசாத்தியத்திலும் அசாத்தியமே" என்றெண்ணினாள்.

பிரதாபன்:— அதற்கென்ன செய்வது யாவும் விதிபோல் நடக்கும்.

லலிதை:—ஐயா, உமது மனம் கல்லோ! 'பெண்ணென்றால் பேயும் இரங்குமே'

பிரதாபன்:— நீர் சொல்வது சரியே எனினும், ஒரு பெண்பொருட்டு இந்நாட்டாரை அலைய விட்டு வருவது எனக்கு நியாயமாகத் தோன்றவில்லை.

லலிதையோ யாதும் பேச வாயெழாது தலைகுனிந்தாள். அவள் இதயம் ஆயிரந் தேள்கள் கொட்டினதே போல் துடி துடித்தது.

அத்தருணம், ரஜபுத்திரனொருவன் வர, பிரதாபன் அவனை ஒரு மறைவிடத்தில் அழைத்துப் போய், "செய்தி யாது?" என வினவினான். அதற்கவன், 'இனி' காதல் விஷயமாய்ப் பிரதாபர் என்னிடம் ஆட்களனுப்பினால் அவர் கஷ்டமடைய நேரிடுமென்று அவரிடஞ்சொல். ராஜபுத்திர மங்கையர் தாம் காதலுற்ற ஆடவரையன்றி வேறொருவரையும் சட்டை செய்யமாட்டார் என்பதை அவர் அறியட்டும். அவரை நான் மணம் புரிந்து கொள்ளும் பொருட்டு அவர் என்னை வற்புறுத்தும் விஷயத்தை என் காதலர் அறிவரேல் அவர் உயிருக்கு ஹானி நேரிடுமென்று சொல். அவ்விஷயத்தைப் பற்றி நீ இவ்விடம் வந்தால் நீ தகுந்த தண்டனை அடைவாய் ஜாக்கிரதை! தெரியுமா?' என்று சொல்லி அஹ்ரிபாய் அம்மை என்னை அனுப்பினர் என்றான்.

பிரதாபன்:— "சரி-நீபோ" என்றுரைத்து அவனை அனுப்பி விட்டுப் பெருமூச் செறிந்த வண்ணம் அவ்விருவர் உட்கார்ந்து கொண்டிருந்த விடத்திற்கு வந்தான்.

லலிதை:— ஐயா, நீரென்ன சொல்லுகிறீர்? காவிரிப்பூம் பட்டினத்திற்கு வரப் போகிறீரா-இல்லையா?— பெண் பாவம் பெண் தோஷம்.

பிரதாபன்:— சில நாட்கள் பொறுத்துதான் நான் வர இயலும்.

லலிதை:— அப்படியானல் நாங்கள் காவிரிப்பூம் பட்டினத்திற்குத் திரும்பி நீர் பகர்ந்த பதில் மொழியை அவளுக்கெடுத்துச் சொல்லுகிறோம். பாவம், நாங்கள் போவதற்குள் இறந்து போயிருக்கின்றாளோ—என்னவோ.

பிரதாபன்:—இன்னும் இரண்டு மூன்று நாட்கள் இவ்விடத்தில் தங்கி யிருங்கள். உங்களுடன் நான் வரக்கூடுமானல் வந்துவிடுகிறேன்.

லலிதை:— சரி-உமதிஷ்டம் போல் செய்கிறோம்.

* * * *

இருபத்து மூன்றும் அத்தியாயம்

யுத்தம்

1568-ம் ஸ்ரீ பிப்ரவரிமீ பிறந்தது.

மீவார் நாட்டுவாசிகள் யாதொரு மனக்கலக்கமுமின்றி வாழ்ந்து வந்தனர்; அவ்வித சமாதான அரசாட்சிக்குக் காரண கர்த்தராயிருந்த உதய ஸிங்கரையும் பிரதாப ஸிங்கரையும் போற்றினர். சாருணி தேவியை மனமொழி மெய்களால் துதித்து நின்றனர். சித்தூர் துர்க்கத்தின் வலிமையை மெச்சினர்.

பாவம்! அவர்கள் இனி நிகழப்போகும் விஷயங்களைப்பற்றி நினைக்கவே யில்லை. ஆறு வற்ருது எந்நாளும் ஒரேவிதமாய் ஓடிக்கொண்டிருக்கு மென்றுன்னினர். மனிதனுக்கிருப்பதேபோல் இவ்வுலகில் சிருஷ்டிக்கப் பெற்ற ஒவ்வொரு வஸ்துக்கும் காலன் உண்டென்று கிஞ்சித்தும் கருதினரில்லை. மீவார் நாட்டின் சுயாதீனத்தைப் பாதுகாத்து ஜயஸ்தம்பம்போல் நிற்கும் சித்தூர் துர்க்கத்திற்கும் முடிவு வந்தது. சாருணி தேவியின் கிருபா கடாக்ஷமும், ராஜபுத்திரர் மனோவலிமையும், ஜயமாலையின் யுத்த சாமர்த்தியமும் வீரசேனனின் சமயோசித யுக்தியும் இத்தடவை உலகப் பிரசித்திபெற்ற நமது சித்தூர் துர்க்கத்தைக் காக்கப் போகிறதில்லை.

* * * *

1568-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ந்தேதி காலை 8-மணியிருக்கலாம். மீவார் நாடு முழுவதும் அமளி குமளியாய்விட்டது. அத்தருணம் சித்தூர் கோட்டைக் கருகே ஒரு வெளியிடத்தில் சேனாபதி பட்டம் வகித்திருந்த வீரசேனன் நடத்திவந்த சேனாசமுத்திரத்தின் எதிரில் உயர்ந்த பீடமொன்றில் எழுந்து நின்று ஜயமாலை பின் வருமாறு பேசினார்:—

"ஏ, ரஜபுத்திர வீரர்காள்! நீங்கள் ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்த நாள் வந்திருக்கிறது. இத்தினத்தை நற்றினமாகக் கருதி உங்களெண்ணத்தை நிறைவேற்றுங்கள். மொகலாயர் சிறைபிடித்திருக்கும் நமது இந்திய மாதாவைத் துன்பத்தினின்று நீக்குங்கள். அவள் பொருட்டு எதிலரை எதிர்த்து ரக்தம் சிந்தின அவளருமைப் புதல்வரைக் காட்டிலும் நீங்கள் மனோ வுறுதியிலும், திடகாத்திரத்திலும், கைவன்மையிலும் சிறிதும் குறைந்தவர்களென்று நான் நினைக்கமாட்டேன். அவ்விதம் நினைப்பின் எனக்கு நரககதியே சித்திக்கும்; அதற்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. ஆ, என்னெதிரில் நிற்கும் உங்களில் ஒவ்வொருவர் முகத்திலும்ஜயலட்சுமி தாண்டவ மாடுகிறாள். இது உண்மை இது சத்தியம். இவ்வுலகில் உங்களைப்போன்ற ரஜபுத்திரரைக் காணின் யாவரும் நடுக்கமுற்றோடி மறைவர், அக்பர் நம்மைப்போன்ற சாமான்ய மனிதன் தானே. அவனென்ன தெய்வீகம் பொருந்தியவனோ?— அவனுடைய சேனாபதிகளும் யுத்தவீரரும் காலனுக்கிரையாகத் தக்க மனிதர் தானே. அன்னிய நாட்டான், இதரமதஸ்தன் அவனோ நம்மை எதிர்த்து ஜயிப்பது பண்டைக் காலத்தினின்று யுத்தத்தில் வல்லவர்களாகிய நாமோ தோல்வி யுறுவது.

"ரஜபுத்திர வீரர். தங்கள் பகைவருடன் பொருது மாளாமல் புறங்காட்டி யோடினர் என்னும் அபவாதம் இவ்வுலகிலுண்டோ!— 1303-ம் ஆண்டில் நம்மை எதிர்த்த அலாடீன் சேனைகள் சிதறி யோடினவன்றோ! 1535-ம் ஆண்டில் பகதூர்ஷா நமது புராதன சித்தூர் துர்க்கத்தைப்பற்ற முயன்று பதறியோடினது நீங்கள் அனைவரும் அறிந்த விஷயந்தானே.

"ஏ, ரஜபுதித்திரர்காள்!— நீங்கள் அனைவரும் ரஜபுத்திரரே" உங்களுடைய வீரதீரங்களில் எனக்கு நம்பிக்கை அதிகம். நீங்கள் அக்பரின் சேனையை முறியடித்து நமது நாட்டின் சுயாதீனத்தைப் பாதுகாப்பீர்கள். இது நிச்சயம். சாருணிதேவியின் கிருபாகடாக்ஷம் நம் மீது பூரணமாயிருக்கிறது.

"ஏ, வீரர்காள்! நான் வயோதிகனாய்விட்டேன். என்வாக்கின்சாதுர்யத்தினும் உங்கள் கைகளின் வன்மையே மேம்பட்டு விளங்குகிறது. சுயாதீனத்தின் மகிமையை நன்கு அறிந்த உங்களுக்கு நான் சொல்லவேண்டுவது யாதொன்றுமில்லை. அவ்விதம் யான் யாதாகினும் சொல்லப் புகினும் அதனால் நீங்கள் அடையும் பலன் யாதுமில்லை." என்றார்.

(வரும்) நா. நாகபூஷணம்.

தாய்க்கிழவிகள் தளுக்கு.

நஞ்சை யொக்கும் வஞ்சகமே ஓருருவாய்த் தோன்றிய தன்ன கள்ளமனத்தைக் கொள்ளைக் கொண்டிருக்கும் கணிகை மாதர்களின் செவிலித் தாயென அரும்பெயர் பூண்ட தாய்க்கிழவிகள் (பறவைத்தேடி கன்னியின்மேல் இலக்குவைத்துத் திரியும் வேடுவனேபோல்) ஆடவரை தம் மாயவலைக்குள் சிக்கவைத்து காமப் பித்தேற்றி அடிமைக் கொள்ளும் அவர்களின் அதியற்புத தந்திரோபாயங்களும் சாகசம் பெருத்த சமத்காரமும் வஞ்சக மிஞ்சிய கருத்துகளும் அதனால் பால்யரடையுஞ் சீர்கேட்டையும் இன்னதின்னதென வெள்ளிடை மலைபோல் எடுத்துக்காட்டும் ஓர் அரியநூலாகும் இது.

தவிர தாய்க்கிழவிகள் தம் மக்களுக்கு இளமையிலிருந்தே "அப்பன் வருவான் அதன் பின் மகன் வருவான் தப்புமுறை தள்ளாதே" என்பது முதலிய போதிப்பிக்கும் திவ்விய மந்திரோபதேசங்களையும் சதிசர்ப்பனைகளையும் வசியமருந்திடு முறைகளையும் தாசி வேசிகளின் குலாசார முறைகளையும் இன்னும் அவர்களின் மோசக் கருத்துகளையும் இவ்வரிய நூலில் எடுத்து விளக்கியிருக்கிறது.

இதன் விலை அணா 0—8—0

விகடஞான கோர்ட்டு என்னும்

சிவலோக கிரிமினல் கேஸ்.

இதில் சர்வசாஸ்திர, சர்வசமய சம்மதமாக ஞான விஷயங்களை விகடவகையால் விளக்கி யிருப்பதோடு தெய்வம் ஒன்றேயென்னும் வாதமும், சிவம் ஞானசாத்திரத்தை வைத்திய பாகமாகப் பேசுவதும் சிவம், ட்ராமா நடத்தினரென்பதும் அதன் அரிய பெரிய ரகசியங்களும் ரகசியங்களும், சிவஞான முனிவர் வேதாந்த ஷாப்வைத்திருந்தா ரென்பதும், தாயுமானவர் முதலியோர் சாக்ஷி பகர்வதும், மாயாவாதபஜார் முதலிய கடை பேதங்களைக் கூறுவது, சிவம் அநாதி என்பதும் சிவத்தின் குடும்பம் வியாபாரம் முதலியவைகளைப்பற்றிநடக்கும் தர்க்ககுதர்க்க விகடங்களும்மிக்க அருமையாகஇருக்கும்

இதில் விகட ஜட்ஜி, இன்ஸ்பெக்டர், பிராசிகூடர், பாரிஸ்டர்கள், சாக்ஷிகள் முதலியவர்களின் வாதமும், விசாரணைகளும், இடைவிடாத விகடங்களும் விநோதமான விஷயங்களும் முற்றும் சிரிப்பும் ஆனந்தமும் நிறைந்துள்ளது.

இது படிப்பவர்களுக்கு அறிவைப்பெருக்கி, ஆனந்தத்தை நிறைத்து அஞ்ஞானத்தை யோட்டி அன்பை வளர்க்கும் அரியநூல், படிப்பவர்கள் இதுவரை இம்மாதிரியான விகடம் பார்த்ததில்லை என்பதோடு முற்றும் படிக்காமல் வேறு வேலைக்குப் பிரவேசிக்கவே மாட்டார்கள்.

இதன் விலை அணா 8 தபாற்கூலி அணா 2.

மானேஜர். கலாசிந்தாமணி மயிலாப்பூர், மதராஸ்.